
ekalasam-70:Layout 1 20/10/11 17:47 Page 1

“ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி 2011



“ஸ்ரீ மங்கள விநாயகர் – கிளாஸ்கோ”

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

ekalasam-70:Layout 1 20/10/11 17:47 Page 2





ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 3



மணி 19

# கலசம்
# KALASAM

ஒலி 70

www.saivamunnettasangam.com

FREE ISSUE

## காலணிகளும் கண்ணீரும்

திருமண வைபவத்திலும் அரங்கேற்ற நிகழ்விலும் நிறைவில் முறையே திருமணத் தம்பதி யையும் அரங்கேறிய மாணவரையும் அவையோர் ஆசீர்வதிப்பது நம் கலாசாரம். இந்தச் சமயத்தில் மேடையிலே போகும்போது காலணியைக் கழற்றவேண்டுமா? வேண்டாமா? என்றொரு வாதம் நிகழ்வது பல இடங்களிலே காதில் விழுவதுண்டு. ஐயர் போய்விட்டார், கும்பத்தை எடுத்துவிட்டார்கள், அதனாலே காலணியைக் கழற்றவேண்டாம்; வேண்டியதில்லை என்பது காலணி கழற்ற விரும்பாத கட்சியின் வாதம். காலணியைக் கழற்றுவதில் ஏனோ அவர்களுக்கு அவ்வளவு அசௌகரியம். கர்ணன் கவச, குண்டலங்களுடன் பிறந்ததுபோலத் தாமும் காலணிகளுடனே பிறந்துவிட்டதாக ஒரு எண்ணம் இவர்களுக்கு இருக்கலாம்.

சைவசமயத்தில் திருமணத் தம்பதியை சிவன், உமையாகப் பாவித்தே சடங்குகள் செய்யப்படுகின்றன. அத்துடன் ஆசீர்வதிப்பதும் ஆசாரமான மங்கலச் செயற்பாடு. எனவே அந்த இடத்தில் சுத்தம் அவசியம். வெளியே பல இடங்களிலே நடந்துவிட்டு வீட்டுக்குள் வந்ததும் காலணியைக் கழற்றுகிறோமே! ஏன்? அதே காரணத்துக்காகவே திருமண மேடையிலும் காலணியுடன் செல்வதைத் தவிர்க்கவேண்டும். நமக்குச் சமய, கலாசார விடயங்களில் நம்பிக்கை உண்டோ, இல்லையோ, மற்றவர்கள் நம்பிக்கைக்கு நாம் மதிப்புக் கொடுக்கப் பழகவேண்டும்.

இசை, நடன மேடைகளும் திருமண மேடைபோலவே சுத்தமாகக் கருதப்படுகின்ற இடங்கள். வேற்று இன, வேற்றுமத சார்புடையவர்கள்கூட திருமணங்களிலும் அரங்கேற்ற மேடைகளிலும் நம்மிற் சிலர் காலணியைக் கழற்றுவதைப் பார்த்துவிட்டு தாமாகவே கழற்றுகிறார்கள்; அல்லது காரணம் கேட்டுவிட்டுக் கழற்றுகிறார்கள். மற்றையவர்களின் கலாசாரங்களில், நம்பிக்கைகளில் உடன்பாடு இருக்கோ இல்லையோ, அதை மதிக்கவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நம் இனத்தவர், நம் மதத்தவர் கழற்றாமலே போகும்போது பார்க்க நெஞ்சை நெருடும்.

சில வருடங்களுக்குமுன் ஒரு நடன அரங்கேற்ற மேடையில் நடன ஆசிரியையே குதி உயர்ந்த காலணியை அணிந்து “டொக்” “டொக்” என நடந்துவந்தார். மேடையிலே இருந்த ஏனைய கலைஞர்கள் அதிசயமாகப் பார்த்தார்கள். ஆனால் ஆசிரியருக்கு அது தவறாகத் தெரி யவில்லை. இப்படியான நிகழ்வுகளைப் பார்க்கும்போது மனம் மிகவும் வேதனைப்படுகிறது; கண்களில் நீர்வருகிறது - நம் கலாசாரம் சீரழிகிறதே என்ற கவலையால்!

அண்மையில் ஒரு மிருதங்க ஆசிரியரின் கலை நிகழ்வுக்குப் போயிருந்தேன். பொதுவாக மேற்கத்திய இசைக் கருவிகளை வாசிப்பவர்கள் மேடையில் காலணியுடனேயே வாசிப்பார்கள். அது அவர்களின் பழக்கம். ஆனால் இந்த நிகழ்ச்சியில் ‘ட்ரம்ஸ்’ வாசித்த ஆங்கிலேயர் காலில் எவ்வித காலணியும் இன்றி மேடையில் இருந்து வாசித்ததைப் பார்த்தபோது மிக ஆச்சரியப்பட்டேன். அப்போதும் கண்ணீர் வந்தது. அது? ஆனந்தக் கண்ணீர்!!

- க ஜெகதீசுவரன், ஆசிரியர்

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர்
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

ekalasam-70:Layout 1  20/10/11  17:48  Page 4



# இந்த இதழில்


| | |
|---|---|
| கிளாஸ்கோ ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம் | 03 |
| துறந்திலேன் பிடித்த கொள்கை - கந்தபுராணச் சிந்தனைகள் | 07 |
| திருப்புகலூரில் திரிபு வழிபாடு | 09 |
| அப்பரை அழைத்த குறிப்புக்கள் | 11 |
| இமயம் - பயணக்கட்டுரை | 12 |
| ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் | 19 |
| சாக்கியரும் சிறப்புலியும் - பெரியபுராணத் தொடர் | 22 |
| இறைவன் விரும்பியது எதை | 26 |
| திருமுறைகளில் திருமால் | 30 |
| தவில் சக்கரவர்த்தி தட்சணாமூர்த்தி | 33 |
| விநாயகர் அருட்பாடல்கள் | 35 |
| ஆலய வழிபாடும் வேதாகம நெறியும் | 36 |
| சிந்திக்க... சில துளிகள் | 37 |
| கண்ணனும் தாத்தாவும் | 38 |
| Hinduism in search of Answers | 42 |
| திருக்குறள் கற்போம் | 47 |


**அட்டைப்படம்: கிளாஸ்கோ ஸ்ரீ மங்கள விநாயகர்**

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 5



# கிளாஸ்கோ ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம்

திருமதி. வைதேகி இராஜத்திலகன் - செயலாளர்

எமது ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம் தோன்றிய வரலாற்றை அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டா' என்றொரு பழமொழி உள்ளது. ஆனால் ஸ்கொட்லாந்தில் இருக்கும் கிளாஸ்கோவில் வாழ்கின்ற தமிழராகிய நாம் சில வருடங்கள் வணக்கத்திற்கு என்று ஓர் இடம் இல்லாமல் மனக்கவலையுடன் வாழ்ந்து வந்தோம். அத்தோடு புலம் பெயர்ந்த மண்ணில் வாழும் நாம் எமது கலை, கலாசாரங்களை எமது மக்களோடு பகிர்ந்து கொள்ளவும், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பற்று தனிமைப்பட்டவர்களாக இருந்தோம். இந்நிலை தொடர்ந்தால் எமது சைவசமயத்தினரும் எமது சந்ததியினரும் எமது பாரம்பரிய சமய கலா சாரங்களிலிருந்தும் சைவ ஒழுக்கத்திலிருந்தும் நழுவிப் போய்விடுவார்களோ என்ற மனக் கிலேசம் எல்லோர் மனதிலும் உண்டாகியது. இப்படியான காலகட்டத்தில், 2004ஆம் ஆண்டுக் கடைசியில் திருமதி. நளாயினி சில்வெஸ்டர் என்பவரின் நண்பரான திரு.லக்மால் காவல என்பவர் 'இங்கு எல்லாமதத்தவர்களும் தமக் கென ஆலயங்கள் அமைத்து வழிபாடு செய்து வருகின்றார்கள், நீங்கள் ஏன் ஓர் ஆலயம் அமைக்கவில்லை?' எனக் கேட்டார். அப் பொழுது நம்மிற் பலர் அகதிகளாக இருந்த காலம். எம்மால் இது முடியுமா? எனக் கேட்ட பொழுது, எம்மால் முடியும் என்ற நம்பிக் கையைக் கொடுத்த அவர்தான் எமது முதல் வழிகாட்டி.



அதன் பின் திருமதி நளாயினி சில்வெஸ்டர் தனது மற்றொரு நண்பரான திரு. இராஜத் திலகன் ஜீவராஜமுதலியாரிடம் இந்த விடயத்தை நாம் மூவரும் சேர்ந்து ஆலோசிக்கவேண்டும் என அழைத்தார். அதன்படி ஒருநாள் மூவரும் ஒன்றுகூடி ஆலோசித்ததன் விளைவாக மண்டபம் ஒன்றை வாடைகைக்கு எடுத்து வழிபாடு செய்வது என முடிவு செய்தோம். அவ்விடயமாக எங்கு, எப்படி, யாருடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்ற விவரங்களை திரு.லக்மால் காவல கூறினார். அதன்படி நாம் ஆலயம் ஆரம்பிப்பதற்கு முதற் படியாக எமது சைவமக்களை ஒன்று சேர்க்க வேண்டும்; சைவமக்கள் அனைவரோடும் தொடர்பு கொள்வது எப்படி என்பவற்றைச் சிந்தித்த பொழுது அப்போ மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்த திரு.இராஜ்குமார் சுப்பிரமணியம் தான் நினைவில் வந்தார். அவர் மூலமாக எம்மால் முடிந்த அனைத்து சைவ மக்களுக்கும் அழைப்புவிடுத்து 16.01.2005 அன்று ஆலய அங்குரார்ப்பணத்திற்கான பொதுக்கூட்டத்தைக் கூட்டினோம். அன்றைய தினமே அங்கத் தவர்களையும் நிருவாகத்தினரையும் தெரிவு செய்தோம். தலைவராகத் திருமதி. நளாயினி சில்வெஸ்டர் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த கட்டமாக ஆலய அங்குரார்ப்பண பூஜையைத் தொடங்க வேண்டியிருந்தது. அதற்காக திருமதி. நளாயினி சில்வெஸ்டர் தனக்குத் தெரிந்த ஐயா ஒருவர் லூயிஷம் சிவன்கோயிலில் இருப்பதாகக்கூறி செயலா ளராக அப்பொழுது இருந்த திரு. விஸ்வ லிங்கம் கணேசமூர்த்தி அவர்களுடன் தொடர்பு

கொண்டார். அவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் தனது நிர்வாகத்தின் உதவியுடன் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்கின்றேன் எனக் கூறினார். அதன் பின்பு 24.04.2005 இல் ஆலய அங்குரார்ப்பண பூசை செய்வது என முடிவு செய்யப்பட்டது.

அதற்காக லூயிஷம் சிவன்கோயிலில் இருந்து அன்றைய நிர்வாகத்தினர் துன்னையூர் சிவஸ்ரீ ராம் தேவலோகேஸ்வரக்குருக்களையும் அவரிடம் மூன்று கடவுள்களின் திருவுருவப் படங்களையும் கொடுத்து அனுப்பி வைத்தனர். அதன்படி 24.04.2005 நண்பகல்*12.00* மணியளவில் கிங்ஸ்வே கோட் மண்டபத்தில் தலைவர் திருமதி. நளாயினி சில்வெஸ்டரின் தலைமையில் சிவஸ்ரீ ராம்.தேவலோகக்குருக்கள் அவர்கள் “ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம்” எனப் பெயர் சூட்டி அங்குரார்ப்பண பூசையை வெகு சிறப்பாகச் செய்தார். எமது ஆலயச் செலவுகளுக்கென மாதாந்தம் ஒவ்வொரு குடும்பத்தினரும் £10 தந்துதவினர். அத்தோடு மிகவும் ஆர்வத்தோடு பூசைக்குத் தேவையான பொருள்கள், சமையலுக்குத் தேவையான பொருள்களை அன்பளிப்புச் செய்தனர்.

01.05.2005இல் இருந்து வூட்சைட் கலாசார மண்டபத்தை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சில மணித்தியாலங்களுக்கு வாடகைக்கு எடுத்து திருவுருவப்படங்களை வைத்து வழிபாடு நடத்திவந்தோம். இலண்டனில் இருந்து குருக்கள்மார் வந்து பூசை செய்வது கஷ்டமாக இருந்த காரணத்தால் திரு.சிவபாதம் குமாரவேலு அவர்கள் பூசைகளை செய்து வந்தார். சுமார் முப்பத்தைந்து குடும்பங்கள் ஒன்றுகூடி வழிபாட்டை நடத்தி வந்தோம்.

தீபாவளியை முன்னிட்டு ஒரு கலைவிழா வைப்பதற்கு முடிவு செய்தோம். அனைத்திற்கும் நிதி ஒரு பெரிய தடையாக இருந்தது. இருப்பினும் மக்களின் பங்களிப்புடன் தீபாவளி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதன் பின்பு எமது ஆலயத்தைத் தொண்டு நிலையமாக பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு, 12.10.2005இல் தொண்டு நிலையமாக அங்கீகாரம் பெற்றுக்கொண்டோம். இதற்கு திரு. இராஜ்குமார் சுப்பிரமணியத்தின் பங்கு பெரிதும் உதவியது. திருமதி நளாயினி சில்வெஸ்டர் கனடாவிற்கு சென்றதால் 18.10.2005இல் திரு. இராஜ்குமார் சுப்பிரமணியம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதன்பின்னர் 20.11.2005இல் தெரிவு செய்யப்பட்ட திரு. ஜீவகுமார் மாணிக்கவாசகம் தலைமையிலான நிர்வாகக் காலத்தில் மாதம் ஒருமுறை லூயிஷம் சிவன்கோயிலில் இருந்து சிவஸ்ரீ மணிவாசகக்குருக்கள் வந்து பூசை செய்வதற்கு, செயலாளரான திரு. விஸ்வலிங்கம் கணேசமூர்த்தி நிர்வாகசபையின் அநுமதியுடன் உதவ முன்வந்தார். அதன் பிரகாரம் 2006 தைப்பொங்கல் தினத்தன்று முதற் பூசை சிவஸ்ரீ மணிவாசகக்குருக்கள் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் நிதிப்பற்றாக்குறையால் ஒவ்வொரு ஞாயிறும் நடைபெற்ற வழிபாடு மாதத்தில் இரண்டு ஞாயிறுகளாகக் குறைக்கப்பட்டது. மாதம் ஒருமுறையும் விசேட நாள்களிலும் குருக்கள் அவர்களும் மற்றைய நாள்களில் திரு. சிவபாதம் குமாரவேலு அவர்களும் வழிபாட்டை நடத்தி வந்தனர்.

இளைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளித் தினங்கள் என்பவற்றைக் கலைவிழாக்களாக கொண்டாடினோம். கோடைகாலத்தில் சுற்றுலாவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் தமிழ் வகுப்புக்கள், கராட்டி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக அரச, அரசு சார்பு அற்ற நிறுவனங்களிடமிருந்து நிதிகளைப் பெறத் தொடங்கினோம்.

இதன் பின்பு சிவஸ்ரீ மணிவாசகக் குருக்களின் ஆலோசனையின்படி எமது ஆலயத்திற்காக சுவாமி சிலைககள் வாங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக மக்களிடமிருந்து நிதி சேகரிக்கப்பட்டது. 19.11.2006இல் தெரிவு



ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 7



செய்யப்பட்ட திருமதி. ஆனந்தி வேல்நாயகம் தலைமையிலான நிருவாகக் காலத்தில் சுவாமி சிலைகளும் வழிபாட்டிற்கு தேவையான பொருள்களும் வாங்கப்பட்டன. சிவஸ்ரீ மணிவா சகக்குருக்கள், தன் விடுமுறையில் இந்தியா சென்றபொழுது இச் சிலைகளைச் செய்வித்து எடுத்துவந்தார். ஆனால், சுவாமிசிலைகளை நிறுவி வழிபாட்டை ஆரம்பிப்பதற்கு நிரந்தர இடம் இல்லாமல் இருந்தது. சுவாமி கும்பிடும் பொழுது ஆலயம் கட்டி சுவாமியை பிரதட்ஷணம் செய்வதாக மனக்கண்ணில் கற்பனை பண்ணுங்கள், விரைவில் நிஜத்தில் நடக்கும் என சிவஸ்ரீ மணிவாசகக்குருக்கள் எம்மை ஊக்குவிப்பார். வழிபாட்டை ஆரம்பிக்க முடியாமல் சுவாமிசிலைகள் பெட்டிக்குள் இருந்தது எமக்கு மிகவும் கவலையாக இருந்தது.

மேலும் தமிழ் வகுப்புக்களோடு சமய வகுப்புக்கள், பரதநாட்டிய வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. கலை விழாக்களோடு கோடைகாலத்தில் விளையாட்டுப் போட்டியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

18.11.2007இல் தெரிவு செய்யப்பட்ட திரு. ஜீவகுமார் மாணிக்கவாசகர் தலைமையிலான நிர்வாகக் காலத்தில் இரண்டாம் கட்டமாக மக்களிடம் நிதி திரட்டி எமக்கென ஒரு சிறிய £40,000 பெறுமதியான பழைய கட்டடம் வாங்கப்பட்டது. இதற்கு நிதி முழுமையாகச் சேகரிக்க முடியாத போது இறையன்பரும் அப்போது உப செயலாளராகவும் இருந்த திரு. உருத்திரலிங்கம் வல்லிபுரம் £8,000 கடனாக கொடுத்து கட்டடத்தை வாங்குவதற்கு உத வினார். அக்கட்டடத்தைத் திருத்துவதற்கு மேலும் £50,000 தேவைப்பட்டது.

அதன் பின் 18.01.2009இல் தெரிவு செய்யப்பட்ட திருமதி. ஆனந்தி வேல்நாயகம் தலைமையிலான நிர்வாகக் காலத்தில் மக்க ளிடமும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்க ளிடமும் இலண்டனிலுள்ள ஆலயங்க ளிடமிருந்தும் நிதி திரட்டி கட்டடம் திருத் தப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் எமது தாய்நாட்டில் நடைபெற்ற அனர்த்தங்களால் அனைவருமே மனம் நொந்திருந்த கார ணத்தால் கட்டடத்தைத் திருத்துவதற்கான நிதியைத் திரட்டிக் கொள்ள ஒருவருடத்திற்கு மேல் எடுத்தது. நாம் சமய நடவடிக்கைக ளோடு கலை, கலாசார, விளையாட்டு நடவடிக்கைகள் என சமூக முன்னேற்ற முயற் சிகளையும் மேற்கொண்டதால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கட்டடத்தைத் திருத்துவதற்கு ஆரம்ப நிதியைப் பெற முடிந்தது. முதலில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பின்னர் படிப்படியாக மக்களிடமும் இலண்டன் ஆலயங்களிடமிருந்தும் நிதி திரட்டப்பட்டு கட்டடம் திருத்தி முடிக்கப்பட்டது. 31.01.2010 கட்டடத்தைத் திருத்துமுன் சிவஸ்ரீ மணிவாசகக் குருக்களால் கட்டடத்தில் சாந்தி பூசை செய்யப்பட்டது. அதன்பின்பு மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்ட திருத்த வேலைகள் சித்திரை மாதத்தில் நிறைவு பெற்றன. £40,000 செலவில் பிரதான திருத்த வேலைகள் 'கிளையிட் வாலி ஜொயினர்ஸ்' எனும் கட்டட ஒப்பந்த காரர்களைக் கொண்டு செய்யப்பட்டது. ஏனைய வர்ணம் தீட்டுதல், தளத்திற்குப் பலகை போடுதல், துப்பரவு செய்தல் போன்ற பணி களை எமது மக்கள் தொண்டாக முன் வந்து செய்ததால் பணம் சேமிக்கப்பட்டு ஆலயத் திற்கு தேவையான ஏனைய பொருள்கள் வாங்குவதற்கு உதவியாக இருந்தது. எமது மக்களின் சரீரத் தொண்டை என்றும் மறக்க முடியாது. அது விலைமதிப்பில்லாதது.

07.03.2010இல் மீண்டும் திருமதி. ஆனந்தி வேல்நாயகத்தை தலைவராகக் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. 2010ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று சிவஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்கள் கடவுள்களின் திரு வுருவப்படங்களை வைத்து எமது கட்டடத்தில் சாந்திபூசையையும் முதற் பூசையையும் செய்தார். அதன் பின்பு மாதமொருமுறையும் விசேட தினங்களிலும் சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள், சிவஸ்ரீ உமேந்திரக் குருக்கள், சிவஸ்ரீ பிரணவன் குருக்கள் ஆகியோர் இலண்டனில் இருந்து வந்து பூசைகளைச் செய்தனர். ஏனைய நாள்களில் திரு.சிவபாதம் குமாரவேலு வழி பாட்டைச் செய்து வந்தார்.

எமக்கு இப்பொழுது சொந்தக்கட்டிடம் உள்ளது என்பதால் இதற்கு மேலும் சுவாமி சிலைகள் பெட்டிக்குள் இருக்கக்கூடாது என எண்ணி கும்பாபிஷேகத்திற்குரிய வேலைகளைச் செய் யத் தொடங்கினோம். திரு.சிவபாதம் குமார வேலு விடுமுறைக்காக இந்தியா சென்றபோது சுவாமிகளுக்கு தேவையான பீடங்களையும் ஆலயத்திற்கும் கும்பாபிஷேகத்திற்கும் தேவை

யான ஏனைய பொருள்களையும் வாங்கி வந்தார். எமது சிறிய மண்டபத்திற்குள் மக்கள் வசதியாக வழிபடுவதற்கு ஏற்ற வகையில் திட்டமிட்டு ஆலய அமைப்பைச் செய்ததோடு முடிந்தவரை எளிமையாவும் சிக்கனமாகவும் தேவைகளை மதிப்பிட்டுச் செலவுகளைச் செய்தோம்.

எமது ஆலய வளர்ச்சிக்காக மாதாந்தம் மக்கள் தரும் உதவிப்பணத்தை £15ஆகக் கூட்டினோம். இதன்போது மிக முக்கியமான விடயமொன்றை நாம் குறிப்பிட வேண்டும். ஆறு வருடங்களாக எமது ஆலய வேலைகள் அனைத்தையும் மக்கள் எல்லோரும் ஒரு தொண்டாகவே செய்தார்கள். எம்மிடம் ஊதியம் பெறும் ஒரு பணியாளர்களும் இல்லை என்பதை பெருமை யோடு கூறிக் கொள்கின்றோம். எமது மக்கள் பணிகளைச் செய்ததோடு நன்கொடைகளும் கோரும் போதெல்லாம் தம்மால் முடிந்ததை கொடுத்து உதவினார்கள்.

எமக்கு எப்பொழுதும் லூயிஷம் சிவன் கோயில் நிர்வாகத்தினரும் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தினரும் உறு துணையாக இருந்து வந்தனர். அவர்களில் Dr துரைராஜா ஸ்ரீஸ்கந்தராஜா (தவைர்), திரு. விஸ்வலிங்கம் கணேசமூர்த்தி (செயலாளர்), திரு. வல்லிபுரம் கிருஷ்ணானந்தராஜா (உப செயலாளர்) ஆகியோர் லூயிஷம் சிவன் கோயிலிலிருந்தும், திரு. வைரமுத்து இரத் தினம் இராமநாதன் அவர்கள் சைவ முன்னேற்றச் சங்கத்திலிருந்தும் இலண்டனி லிருந்து 2007இல் இங்கு நேரில் வந்து ஆலோசனையும் ஆதரவும் தந்ததோடு இலண்டனிலுள்ள சைவ ஆலயங்களின் நிர்வா கத்தினருக்கும் அறங்காவற் சபையினருக்கும் எம்மை அறிமுகப்படுத்தி எமக்கு எல்லோ ரினதும் ஆதரவும் உதவியும் கிடைக்க ஊன்று கோலாக இருந்தனர். மேலும் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தினரும், உயர்வாசக்குன்று முருகன் ஆலயத்தினரும், விம்பிள்டன் கணபதி ஆலயத்தினரும் டூட்டிங் முத்துமாரி அம்மன் ஆலயத்தினரும் எமக்கு நிதியுதவியும் பொருளுதவியும் அளித்து ஆதரவு தந்துள்ளனர்.

17.04.11 கும்பாபிஷேகம் செய்வது என முடிவாகியபோது கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திரு. சச்சிதானந்தன் குமாரவேலு அவர்கள் ஆலய நிர்வாகசபை, அறங்காவல் சபையினரின் ஆதர வுடன் கும்பாபிஷேகத்திற்காகக் குருக்கள் மார்களிலிருந்து பூசைப்பொருள்கள் வரை சகல ஏற்பாடுகளையும் இலண்டனிருந்து செய்து உதவினார். மேலும் எமக்கு நிரந்தரமாக பூசை செய்வதற்கு சிவஸ்ரீ பத்மசர்மா அவர்களையும் அறிமுகம் செய்து தந்தார்.

கடந்த 17.04.11 சிவஸ்ரீ இரா பத்மகுமாரக் குருக்கள், சிவஸ்ரீ பராபரக்குருக்கள், சிவஸ்ரீ பத்மசர்மா, சிவஸ்ரீ சபாநாத சிவசுதசர்மா ஆகி யோர் ஒன்றிணைந்து வெகு சிறப்பாக எமது ஆலயக்கும்பாபிஷேக கிரியைகளை நடத்தினர். அதனைத் தொடர்ந்து நடந்த பன்னிரண்டு நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகப் பூர்த்திநாளான கடைசிநாள் சங்காபிஷேகத்துடன் விழா இனிதே நிறை வேறியது. எமது ஆலய கும்பாபிஷேகத்திற்கும் சங்காபிஷேகத்திற்கும் லூயிஷம் சிவன்கோயி லிலிருந்து திரு. விஸ்வலிங்கம் கணேசமூர்த்தி, திரு. வல்லிபுரம் கிருஷ்ணானந்தராஜா ஆகி யோரும், கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தி லிருந்து திரு. செல்லப்பா இராமச்சந்திரன், திரு. தாமோதரம்பிள்ளை யோகநாதன், திரு. சச்சி தானந்தன் குமாரவேலு ஆகியோரும் வந்து எம்மோடு இணைந்து கொண்டது எமக்கு அளவில்லா உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

தற்போது கிளாஸ்கோவில் சைவமக்கள் அனை வரும் வழிபட ஆலயம் உள்ளது என்பதை நினைக்கும்போது எல்லோர் மனதும் மிகவும் நிறைவடைகின்றது. அனைத்து மக்களும் ஒன்று பட்டு ஆறு வருடங்கள் போராடி விநாயகரின் அளப்பரிய கருணையால் இவ்வாலயத்தை அமைத்ததை எண்ணி மனம் பூரிப்படைகின்றது.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

**பண்ணிய மேந்துங் கரந்தனக் காக்கிப்**
**பால்நிலா மருப்பமர் திருக்கை**
**விண்ணவர்க் காக்கி அரதனக் கலச**
**வியன்கரம் தந்தைதாய்க் காக்கி**
**கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்**
**கரிசினேற் கிருகையு மாக்கும்**
**அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத்**
**சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்.**

*(தொடர்பு விவரங்கள் பக்கம் 18இல்)*

தாளாத கீர்த்தியை விரும்புகின்ற இளைஞன் ஒருவன் ஒரு சிறந்த இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இலட்சியத்துக்காகப் பிடித்த கொள்கைக்காக தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணிக்கவேண்டும் என்று அறிவாளிகள் சொல்வார்கள். கொள்கைப் பிடிப்பு இல்லாதவர்களுக்குக் கீர்த்தி இல்லை. எனவே கொள்கையைத் தெரிவு செய்வதில் ஒவ்வொருவரும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஆனால், கொள்கை என்று ஒன்றைத் தெரிந்து அதன்படி வாழத் தொடங்கியவர், அதனைக் காப்பதற்காக எதையும் இழக்கத் துணிந்தவர். இந்த இலட்சியமோ, கொள்கையோ எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை பானு கோபன் மூலம் கந்தபுராணம் சொல்கின்றது. மிகவும் நீண்ட காலம் ஆனாலும் முடிக்கக்கூடிய செயல் ஒன்றை. இடையில் விடாது முயன்று அதை அடைதல் நல்லவர்க்கு இயல்பாகும். இங்ஙனமின்றி உடலை வருத்தியும், தம்மால் முடியாத செயலை இது முடியும் என்று எண்ணிக்கொண்டு அதைச் செய்வது மூடர்களின் இயல்பாகும்.

# துறந்திடேன் பிடித்த கொள்கை

**கந்தபுராண சிந்தனைகள்**

**சிந்திப்பவர் - முனைவர் சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்**

**நெடிது பற்பகல் செல்லினும் நிரம்புவ தொன்றை**
**இடைவி டாமலே முயன்றுபெற் றிடுகிற தியற்கை**
**உடல்வ ருத்தியும் தங்களால் முடிவுறா தொன்றை**
**முடிபு மீதெனக் கொள்வது கயவர்தம் முறையே**

பானுகோபன் வதைப்படலம் -18

இவ்வாறாக 'நிரம்புவது ஒன்றை' இலட்சியமாகக் கொள்ளவேண்டும் என்று கூறிய கந்தபுராணம், பிடித்த கொள்கையைக் கடைசிவரையும் கைவிடக்கூடாது எனச் சூரன் மூலம் பின்வருமாறு சொல்கிறது.

முதல் நான்கு நாள்களிலும் நடந்த யுத்தத்திலே சூரனின் புதல்வர்களும் அமைச்சர்களும் இறந்துவிடுகிறார்கள். சூரன்கூடத் தோற்று ஓடிவந்துவிட்டான். அந்த நிலையிலே, பானுகோபன் தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்துச் சமாதானம் செய்து யுத்தத்தை நிறுத்தும்படி ஆலோசனை கூறுகிறான். தேவர்களை அடக்கி ஆள்வதையே தன் கொள்கையாகக் கொண்டவன் சூரன். அதைக் கைவிட அவன் தயாராக இல்லை. 'மைந்தனே! நீ என்ன வார்த்தைகளை உரைத்தாய்? நீ சொன்னவாறு தேவர்களைச் சிறை விடுத்தேன் ஆயின் என்னை, இவன் அரசர்க்கு அரசன் என்று எவர் மதிப்பர்? அதுவுமன்றி எனக்கு நீங்காத பழியும் உண்டாகும். கூனும் செவிடும் முடமும் குருடும் பெரிய ஊமையும் ஆகிய இவை ஒருவனுக்கு ஏற்பட்டுள்ள இகழ்ச்சி என்றாலும் அவை அவனுடைய உடலுடன் அழியும். ஆனால் மானம் இழந்து உலகில் வாழ்கின்ற மற்றவரின் வசை ஏழு பிறவியிலும் அகலுமோ? அகலாது. தேவர்களும், பிரமதேவரும், திருமாலும் என் ஆணைப்படி நடக்க அரசு புரிகிறேன். சிவனிடம் வரங்கள் பெற்றேன். இவ்வாறிருக்க, வன்மை அற்றவர்போல் தேவரைச் சிறைவிடுவேனா? அழகு, இளமை, ஆற்றல், செல்வம், வீரம், நிகரில்லாத சுற்றம் எல்லாம் நிலையற்றவை. புகழ் ஒன்றே நிலையானது. இறக்க நேர்ந்தாலும், அன்றி துன்பம் ஒன்று வந்தாலும் பெரியவர் தம்மிடத்துள்ள மானத்தை விடமாட்டார். சிறந்த இந்த இரண்டுநாள் செல்வத்தை விரும்பி நான் என் கொள்கையை விடமாட்டேன். நான் சூரன் என்று ஒரு பெயர் பெற்றுள்ளேன். அதற்கு மாசு வர விடமாட்டேன்' என்கிறான் சூரன்.

**இறந்திட வரினும் அல்லால் இடுக்கணொண் றுறினுந் தம்பால்**
**பிறந்திடு மானந் தன்னை விடுவரோ பெரிய ரானோர்?**
**சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பி யானும்**
**துறந்திடேன் பிடித்த கொள்கை சூரனென் றொருபேர் பெற்றேன்**

பானுகோபன் வதைப் படலம் -27

இதைவிட வீரமான கொள்கைப் பிடிப்பை வேறு எங்கே காணமுடியும்? கடைசியாக, முருகப் பெருமானால் அழிக்கப்படுமுன், சூரன், 'ஏக முதல்வனான முருகன் எதிரில் நான் இன்று போர் செய்தேன். இனித் தளரேன். நல்லதொரு பெருமை பெற்றேன். அதனால் வீரனும் ஆனேன். இதனாலான புகழே நிலைத்து நிற்கும். இந்த உடல் அவ்வாறு நிலைக்குமா? நிலைக்காது' என்று கூறுகிறான்.

**ஒன்றொரு முதல்வ னாகி உறைதரு மூர்த்தி முன்னம்**
**நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினித் தளரேன் அம்மா**
**நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்**
**என்றுமிப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்பதுண்டோ?**

சூரபன்மன் வதைப்படலம் -448

இவ்வாறு தான் பிடித்த கொள்கைக்காக தன்னுடைய கிளையோடு மாய்ந்த சூரனின் கொள்கைப்பிடிப்பு சிந்திக்கவேண்டியதொன்றே!

# மனித நேயம்

ஸமீபத்தில் 'மனிதநேயம்' என்று ஒரு வார்த்தை உலாத்துகிறதாகப் பார்க்கிறேன். நல்ல வார்த்தைதான். காதுக்குக் கேட்கவும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் 'மனிதாபி மானம்' என்று இத்தனை நாளாகச் சொல்லி வந்ததில் 'அபிமானம்' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தை இருப்பது பிடிக்காமல்தான் இப்படி மாற்றியிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கும்போது பரிஹாஸமாகத்தான் இருக்கிறது! ஏனென்றால் 'நேயம்' என்பதும் ஸம்ஸ்கிருத 'ஸ்நேஹ'த்தின் திரிபுதான்! ஸம்ஸ்கிருதம் என்பது இலக்கண சுத்தமான பாஷை. அதையே பேச்சுக் கொச்சையாக இருக்கும்போது ப்ராக்ருதம் என்பார்கள். அந்தப் ப்ராக்ருத பாஷையில்தான் ஸம்ஸ்கிருதத்திலுள்ள நாடகங்களில் ஸ்திரீகள், படிப்பில்லாதவர்கள் ஆகியவர்கள் ஸம்பாஷிப்பார்கள். அதிலே 'ஸ்நேஹம்' என்பது 'நேயம்' என்றுதான் வரும். அது போகட்டும், 'மனிதநேயம்' என்கிறதிலும் முதலில் மனித என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அதுவும் ஸம்ஸ்கிருத 'மநுஷ்ய' வின் திரிபுதானே?

இதேமாதிரித்தான் 'நீதிபதி' என்பதிலும் 'நீதி' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தையை அப்படியே வைத்துக்கொண்டு 'பதி' மட்டுந்தான் ஸம்ஸ்கிருதம் என்று நினைத்து விரட்டிவிட்டு 'நீதி யரசர்' என்று போடுவதாகத் தெரிகிறது. இந்த 'அரச' என்பதும் இன்னும் 'அரைய' 'இராய' என்கிறதெல்லாமுங்கூட 'ராஜ' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தையின் திரிபுகள்தான். 'மன்னன்' 'கோ' என்கிறவைதான் 'ராஜா' வுக்கான சுத்தத் தமிழ் வார்த்தைகள். ஒருத்தருக்கும் ஒரு ப்ரயோஜனமும் இல்லாமல் இப்படியெல்லாம் வெறும் த்வேஷத்தில் செய்கிற காரியங்கள் கடைசியில் பித்துக்குளித்தனமாகத்தான் முடிகின்றன.


**காஞ்சி பெரியவர் அருள்வாக்கு**
**நன்றி கல்கி - தகவல்: லண்டன் சபரி**

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 11



# திருப்புகலூரில் நிகழ்ந்த திரிபு வழிபாடு!

இடைக்காடு சயம்பு (வேல்ஸ்)



திருநாவுக்கரசு நாயனார் திருப்புகலூரில் முத்தியடைந்தார் என்ற புனித செய்தியை முந்திய கட்டுரையில் பார்த்தோம். இனி அவர் முத்தியடைந்த பின் திருப்புகலூர்க் கோயிலில் நிகழ்ந்ததைப் பார்ப்போம். நாயனாருடைய பதிகத்தின் (பதிகம் ஙகங 313) இரண்டாவது பாடலைப் பார்ப்போம் கடைசி இரண்டு அடிகளும் கூறுவது:

**சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்**
**சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச்**
**<u>சிங்கமே</u> யுன்னடிக்கே போது கின்றேன்**
**திருப்புகலூர் மேவிய தேவ தேவே.**

நாயனார் முதற் பாடலிலே 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' என்று பாடி மற்றைப் பாடல்களிலும் கடைசி அடிகளை இந்தப் பொருள்பட அமைத்தார். இரண்டாவது பாடலிலே, 'சிங்கமே யுன்னடிக்கே போது கின்றேன்' என்று பாடினார். 'சிங்கமே' என்ற சொல் இறைவரைப் பெருமைப் படுத்தக் கூறிய சொல். அந்தச் சொல்லை அந்தக் காலத்துச் சிவாசாரியார்கள், பூசகர்கள் எடுத்துக் கொண்டு அதை ஒரு நாடகமாக அமைத்து இறைவர் சிங்க உருவமாய் வந்து நாயனாரை விழுங்குவது போல் காட்சி விழாச் செய்து வந்திருக்கிறார்கள். சிங்கம் முழுமையாய்ப் பெரிய உடல்களை விழுங்குவதில்லை.

கல்வியறிவு, பகுத்தறிவு, பத்தியுணர்வு அற்றவர்கள் போல் நடந்திருக்கிறார்கள். இது ஆச்சரியமான நிகழ்ச்சி! வழிபாட்டுக்கு ஒவ்வாத அருவருப்பான செய்கை; மகாபாவம்; சிவாபராதம் பற்றக்கூடிய வினை. இதுபற்றிப் புராண உரையாசிரியர் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியாரும் பதிப்பாசிரியரும் எழுதியவற்றைத் தருகிறேன்.

**உரையாசிரியர்:**

இறைவர் ஒரு சிங்கத்தின் உருவெடுத்துவந்து நாயனாரைத் தின்று விழுங்கிவிட்டனர் என்று ஒரு கற்பனைக் கதை கேட்கப்படுகின்றது. திருப்புகலூரில் அத்தகையதொரு உருவமும் செதுக்கப்பட்டுக் கோயிலினுள் வழிபடுமாறு வெளிச்சுற்று மதிற் சுவரில் வைக்கப்பட்டுள்ளது. தலபுராணமும், 'சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்' என்ற திருவாக்கும் இதற்கு ஆதரமென்று சொல்லவும்படுகின்றது. ஆனால், திருத்தொண்டர் புராணமாகிய அருள்வாக்கு இதற்கு

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 12



இடந்தரவில்லை. உயர்சைவத்திருவாளரும் பேரறிஞரம் பேரன்பருமாகிய கயப்பாக்கம் சதாசிவ செட்டியார், சுவாமிநாத பண்டிதர் முதலிய பெரியோர்கள் இவ் வரலாற்றினைக் கண்டித்தொதுக்கினர். 'சிங்கமே' என்றதனாற் சிங்க உருவமாக வந்தாரெனின் 'போரேறே'(5) என்றதனாற் போரேறாகவும், 'புரிசடையாய்' (6) என்றதனால் சடையராகவும் வந்தார் என வேண்டி வந்து பலவாறும் அசம்பாவிதமாய் முடியும். மேலும் உடம்பின் அபிமான நினைவு முற்றும் மறந்து இறைவனது நினைவில் தீயினடுவுள் ஏழு நாளிருந்த நாயனாரது பெருமைக் கிழுக்காகப் பலவாறும் இவ்வரலாற்றில் சிங்கமாய் இறைவர் உண்டபோது நாயனார் 'வலிக்குதே' என்றதாகவும், இறைவர் 'இனிக்குதே' என்றதாகவும் பலபட அசம்பாவிதங்களும் கேட்கப்படுகின்றன. இதுவுமொரு பொருளாகக் கொண்டு நாயனாரது திருநாளன்று திருப்புகலூரில் நாயனாரது திருநாளில் இறைவரது அருட்குறியைச் சிங்க உருவமாகச் சித்திரித்து வைத்தலும், அவ்விடத்து விளக்குகளை யெல்லாம் அவித்து முழுஇருளில் நாயனாரை எழுந்தருளுவித்துத் திருக்காப்பிடுதலுமாகிய தவறான முறைகளும் வழக்கமாகக் கொண்டாடப்படுகின்ற நிலை பெரிதும் வருந்தத் தக்கதாம்! பேரொளி உருவமாய்ச் சிவானந்த ஞானவடிவேயாகி அமர்ந்த தனை இருளில் அமர்ந்ததாகக் காட்டுவது சிறிதும் பொருந்தாது. அதன் மறுதலையேயாமென்க. அன்பர்களும் அதிகாரிகளும் இவற்றை சிந்திப்பார்களாக.

**இந்தப் புராண உரையின் இரண்டாவது பதிப்பில்**
**பதிப்பாசிரியர் எழுதிய குறிப்பு வருமாறு:-**

இவ்வுரை நூலுள் 1692ம் திருப்பாட்டின் உரையின் கீழ் உரையாசிரியர் 739, 740 பக்கங்களில் நாயனாரை இறைவர் ஒரு சிங்கத்தின் உருவில் வந்து..விளக்கினார்கள். உரையாசிரியர் அவர்கள் பின்னர்த் தாமெழுதிய 'வாகீசர் அல்லது மெய்யுணர்தல்' என்ற நூலிலும் இது குறித்து வலி யுறுத்தினார்கள். பற்பல சபைகளிலும் தாம் ஆற்றிய சொற்பொழிவுகளிலும் தெளிவுறவிரித்தார்கள். பல சைவப் பெரும் புலவர்களும் இக்கருத்துக்கே அரண் கோலினர். இத்தகைய இடைவிடாத நன் முயற்சிகளின் பயனாய்த் திருப்புகலூர் ஆலயத்தின் வெளிச் சுற்று மதிற் சுவரில் முன்னர் இருந்த அசம்பாவிதமான உருவம் சுமார் ஏழு ஆண்டுகளின் முன்பு அகற்றப்பட்டு அங்கு நாயனார் சிவலிங்கத்துடன் ஐக்கியமாகும் காட்சியுள்ள உருவம் அமைக்கப்பட்டுள்ளது. நாய னாரின் திரு நட்சத்திரத்தில் ஆலய விளக்குகளை யெல்லாம் பேரொளிவிட்டு ஒளிரச் செய்து அவ்வொளி வெள்ளத்திடையில் நாயனாரை இறைவனுடன் அணைவித்துத் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. இவ்விவரங்களை 'வாகீசர்' அல்லது 'மெய்யுணர்தல்' என்ற நூலின் பிற் சேர்க்கையில் திருப்புகலூர் அக்னீஸ்வரர் தேவஸ்தானத்தார் தந்துள்ளனர்.
பதிப்பாசிரியர்- க.மங்கையர்க்கரசி.

கற்றறிந்த பெரியோரால் நிலைமை சீரானதற்கு மகிழ்கின்றோம். இறைவருக்கு நன்றி கூறுவோம். தொண்ணூற்றி மூன்று வயதைத் தாண்டும் ஒரு மாணவனின் பணிவான வேண்டுகோள்:-
கோயில் உரிமையாளர்கள், நடத்துனர்கள், சிவாசாரியர்கள், உதவியாளர்கள் எல்லோரும் திருமுறைகளை முழுமையாகப் படியுங்கள். சிவாசாரியர்களுக்கு இருக்கும் கஷ்டம் எனக்கு நன்றாகவே தெரியும். வேத சுலோகங்களை ஆராய்ந்து ஓதுவது போல் திருமுறைகளையும் ஆராய்ந்தால் வழிபடுவோருக்கும் பயனுண்டு. மிகுந்த பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.
திருப்புகலூரின் பெருமை பெருகுக.
திருநாவுக்கரசு நாயனாரின் திருவடிகள் சரணம்
திருச்சிற்றம்பலம்

****

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 13



# திருவலம்புரத்தில் இறைவர் அப்பரடிகளை அழைத்த குறிப்புகள்

**இடைக்காடு சுயம்பு (வேல்ஸ்)**

திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரத்தை வழிபட்ட போது இறைவர் 'என்று வந்தாய்' என்று அழைத்து ஆதரித்தார். திருவாய்மூருக்கு வரச்சொல்லி அழைத்துத் தன் பின்னே வரச்செய்து திருவிளையாடல் செய்திருக்கிறார். எனது முன் கட்டுரைகளிலே இச்செய்திகள் வந்திருக்கின்றன. நாயனார் யாத்திரையாக திருவலம்புரம் சென்றடைந்தார். காட்சி கண்டார்; பதிகம் பாடினார். அடியவர்கள் பாடிச்செல்ல 'யானுமெல்லாம் பணிந்திறைஞ்சிப் பின் பின் செல்ல' என்று முதற்பாடலில் குறிக்கிறார்.



இறைவர் காட்சி கொடுத்துப் பின்னே வரச் சொல்லி அழைத்திருக்கிறார். நான்காவது பாடலிலே 'வா வா என உரைத்து மாயம் பேசி' என்று கூறுகிறார். இறைவர் தெளிவாகக் கூப்பிட்டிருக்கிறார். ஒன்பதாவது பாடலில் 'என் கண்ணின்றகலா வேடங்காட்டி' - குறிப்பால் அழைத்து அருளியதைக் குறிக்கிறார். இந்தப் பதிகம் பத்திச் சுவையும், இலக்கியச் சுவையும்- அகப் பொருட்சுவையும் -நிறைந்தது. இறைவர் செய்த வீரச் செயல்களைக் குறிக்கிறார். பித்தனென்று சொல்வதற்கேற்ப மாயம் பேசுவாராம்-மாயச் செயல்கள் செய்வாராம். 'ஒன்றோடொன் றொவ்வா இவர் செய்கை' என்றும் கூறுகிறார். சங்கர நாராயணர் கோலங்காட்டியதையும், அந்தணப் பிரம்மசாரியாய் பூணூலும் நீற்றுப்பூச்சுமாய் நின்ற கோலத்தையும் கண்டார். பாம்பு இறைவரிடம் வந்ததால் என்றும் இளமையாகவே இருக்கிறதாம். இராமர் பெருமுயற்சி செய்து வீழ்த்திய இராவணனை இறைவர் முன்பு ஒரு விரல் நகத்தால் ஊன்றி நசித்துப் பின் வரங்கள் கொடுத்ததையுங் குறிக்கிறார். இந்தப் பதிகம் திரும்பத் திரும்பப் பாட ஆசையைத் தூண்டும். பாடுங்கள் அன்பர்களே! அடுத்த பிறவிக்குப் பயன் தரும்.

திருவலம்புரம்- திருமுறை 6-பதிகம் 272. திருத்தாண்டகம்.

**செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடுஞ்**
**சேதுபந் தனஞ்செய்து சென்று புக்குப்**
**பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற**
**போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ**
**அங்கொருதன் திருவிரலால் இறையே ஊன்றி**
**யடர்த்தவர்க்கே அருள்புரிந்த அடிக ளிந்நாள்**
**வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி**
**வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே**

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 14



# இமயம்

## பயணக்கட்டுரை

## சாவகச்சேரியூர் டாக்டர் கதிர்காமநாதன்



இந்து சமயசாம்ராஜ்யமாக உலகிலே இருந்த ஒரே ஒரு நாடு நேபாளம். 80 சதவீதமான இந்துக்களை கொண்டு இமயத்தின் மீது இருக்கிறது. தென் மேற்கு, கிழக்கு திசையில் இந்தியாவை எல்லையாகவும், வடக்கில் சீனாவையும் கொண்டு பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது.

500மைல் நீளமும் 90 மைல் அகலமும் கொண்டு 'இமாலய இராய்ச்சியம்' என்ற பெயரும் பெற்றிருக்கிறது.

உலகின் முதல் பத்து(10) உயரமான மலைகளில் எட்டு நேபாளத்தில் காணப்படுகின்றன. இதில் அதி உயரமான எவரெஸ்ட் மலையும் அடங்கும். நே=புனித, பாள்-குகை: புனிதகுகை என கருதுகின்றனர்.

புனிதமான புத்தர் அவதரித்த நாடு நேபாளம். இதை விட பலவிதமான இந்துக் கோயில்கள் பசுபதிநாதர் கோயில் உட்பட, புத்த விகாரைகள், வனங்கள், வளங்கள் பண்பு, பரம்பரை, வழக்கங்கள் நிறைந்தது. இதனாற் போலும் நேபாளம் புண்ணியம் செய்த பூமி என மகான்கள் கூறியுளர்.

இந்துக்களின் ஒரே ஒரு நாடு நேபாளம் என அறிந்தால் சமயத்தில் ஈடுபாடு உள்ளவரின் மனதில் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருக்கும். எமக்கு 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆசை 2011ல் தான் நிறைவேறியது.

**பசுபதி நாதர் கோயில்:**

கிழக்கே விசுவநாதர் (காசி), மேற்கே சோமநாதர் (குஜராத்), தெற்கே இராமநாதர் (தமிழ்நாடு) வடக்கே பசுபதிநாதர் (நேபாளம்) என சிவபெருமானை வழிபடும் தலங்களில் நான்கை முக்கியமாக குறிப்பிடுவர்.

நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவின் வடகிழக்கில் ஐந்து (5) கிலோமீட்டர் தூரத்தில் இவ்விசாலமான, பாரம்பரிய சிவன் கோயில் இருக்கிறது.

லிங்கமான வீற்றிருக்கும் சிவபெருமான்- பசுபதீஸ்வரர் சமீபத்தில் மத சார்பற்ற நாடாக நேபாளம் (2006) மாறுமுன் தேசிய கடவுளாக இருந்தார். இத்தலம் 1979ஆண்டு தொடக்கம் யுனெஸ் கோவில் உலக பாரம்பரிய சின்னங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 15



பசுபதிநாதர் கோயில், கட்டிடக்கலையின் நிர்மாணிப்பு அழகுக்கு எடுத்துக்காட்டாகவும் மத சமய பண்பு நாகரிகம் பரம்பரை வழக்கங்களின் சின்னமாகவும் திகழ்கிறது.

பசுபதீஸ்வரர் என்றால் வாயற்ற ஜீவன்களுக்கு அருள் புரியும் அரன் என்ற பொருளாகும். 'ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானானன் சாழலோ' இக்கோயில் இருக்குமிடத்தில், ஒரு பசுமாடு தினமும் பால் பொழிந்து வந்தது. மாடு மேய்ப்பவன் இதனை அரசனிடம் அறி விக்க, அந்த இடத்தைத் தோண்டிப்பார்த்தனர். அங்கே சுயம்புவாக லிங்கத்தை கண்டு அவ்விடத்திலே அரசன் கோயிலைக் கட்டி யதாக வரலாறு கூறுகிறது. அருகே ஓடும் பாக்மதி நதியில் நீராடிவிட்டு பசுபதிநாதரை வணங்கினால் மறுபிறவி இல்லை என்ற நம்பிக்கை மக்களுக்குண்டு.

**பிரயாணம்:**

இலண்டன் மாநகரிலிருந்து விமான மார்க்கமாக காட்மண்டுவை அடைந்தோம். 05.05.2011 வெள்ளிக்கிழமை. சதுர்த்தி திதியன்று இக்கோயிலுக்கு சென்றோம். முதலில் எமை அதிசயக்க வைத்தது 'பாதணிகளை இல வசமாக வைக்குமிடம்' என்ற ஆங்கில அறி விப்புத்தான். உட்சென்று பாதணிகளை பாதுகாக்க கொடுத்தோம். முகம் சுழிக்காமல் அவர்கள் வைத்துவிட்டு எமக்கு வைத்த எண்ணைத் தந்தனர். பலர் ஒன்றும் கொடுக்காமலே பாதணிகளை பெற்று செல்வதையும் சிலர் அங்கிருக்கும் உண்டியலில் சிறு பணம் போடுவதையும் கண்டோம். கோயிலுக்கு சமீபத்தில் "Hindus only" - இந்துக்களுக்கு மட்டும் என்ற அறிவிப்பு இருந்தது. பூமாலை பூக்கள் பழங்கள் தீபங்கள் உருத்திராட்சமாலை கொண்ட தட்டு ஒன்றை (50/=கொடுத்து வாங்கிக்கொண்டு சென்றோம்.

சிறு வாயில் தான். உள்ளே சென்றதும் எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் போன்று வெகு விசாலமான பிரதேசமுடைய கோயில். பகோடா கட்டக்கலை முறைப்படி அமைத்து சதுரவடிவில் ஒன்றுக்குமேல் ஒன்றாக விருந்தது. மேற்கு வாசலால் தான் செல்ல முடியும். முதல் முன்னே தென்பட்டது தங்கமுலாம் பூசப்பட்ட சிறிது சாய்ந்திருக்கும் பிரமாண்டமான நந்திதான். தஞ்சாவூர் நந்தியளவு இருக்கும்!

பிள்ளையார் சிவன்கோயிலில் இருப்பது போன்று கன்னிமூலையில் இருக்கவில்லை! தேடிப்பிடித்துப் பார்த்தால் பின் பக்கமாக ஒரு சிறு கட்டடத்தில் சிகப்பு பிள்ளையாராக இருந்தார். முதல் வணக்கம் செலுத்திவிட்டு, தீபமேற்றி கோயிலைச் சுற்றி வந்தோம். நாலு வாயிலுள்ள கோயில். நாற்பக்கமும் கும்பிடலாம். வாயில்கள் யாவும் வெள்ளியி னால் செய்யப்பட்டவையாகும். வெள்ளிக் கிழமை என்றதால் ஏகப்பட்ட கூட்டம். வரி சையில் சென்று தான் கும்பிட்டோம். 6(ஆறு) அடி உயரமுள்ள லிங்கம் ஐந்து (5)முகமு டையது. ஒவ்வொரு முகமும் ஒரு வாசலைப் பார்த்தபடி இருந்தது. ஐந்தாவது முகம் மேற்பார்த்திருந்தது. இவை ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோ ஜாதம் - முறையே ஆகாயம், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்ற ஐந்து திசை முகங்கள் சிவாசாரியார் தீப, தூபம் காட்டி மாலை போட்டு அர்ச்சனைத் தட்டைப் பிரசாதத்தோடு சிறிது நேரத்தில் தந்தார்கள். தரிசிக்க அவகாசம் இருந்தது.

சிவாசாரியர்கள் கருநாடக மாநிலத்திலுள்ள சிமோகா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு இங்கு வந்து பூசை செய்கின்றார்கள். இவர்களை 'பட்டர்கள்' எனவும், தலைமையானவரை 'இராவல்' எனவும் அழைக்கின்றனர். மூலவரான பசுபதி நாதரை நான்கு சிவாசாரியர்கள் மட்டும் தான் தொடமுடியும். பரிவார மூர்த்திகளாக விஷ்ணு, அம்மன், அநுமான் போன்ற தெய்வங்கள் உள. நவக்கிரகங்கள் தரைமட்டத்திலே சிறுவடிவு கொண்டு மேற்கு வாசலின் இடது பக்கத்தில் இருக்கின்றன. வீதியில் வலம் வரும் போது

வயதான பசுமாடு தோல் சுருங்கி புண் காயங்களுடன் தள்ளாடி தள்ளாடி சென்றது. யாரும் பொருட்படுத்தவில்லை. பசுவின் மீது பற்றுள்ள பசுபதிநாதன் அல்லவா?

கோயிலை விட்டு வெளியே வரும் போது தட தடவென சரியான மழை. கற்கள் வீழ்ந்தது போல் நீர் கொட்டியது. சிறுது நேரம் தான். ஒதுங்கினோம். தண்ணீர் ஆறாக ஓடியது. கோயிலுக்கு வெளியேயும் ஏகப்பட்ட சிவலிங் கங்கள். சிறு சிறு கூட்டமாக மக்கள் சங்கற்பங்கள் செய்துகொண்டிருந்தனர். இவற்றை விட ஒரு இடத்தில் ஒரே பந்தலின் கீழ் பல ஹோமங்கள் வளர்த்து ஒலிபெருக்கி மூலம் மந்திரங்கள் கோஷிக்க ‘சுவாகா’ என்னும்போது சிவாசாரியர்கள் ஒருமித்து அக்னிக்கு ஆகுதி இட்டனர்.

**ஆர்யகாட்:**

பாக்மதி நதியை கங்கையின் சகோதரியாக கருதுகின்றனர். காசியில் அரிசந்திர காட் இருப்பது போல் ஆர்யகாட் தான் சுடுகாடு. மூன்றோ நாலோ பிரேதங்கள் நதிக்கரையில் எரிந்து கொண்டிருப்பதை கண்டோம். இங்கு உயிர் பிரிந்து உடல் வெந்து சாம்பலானால் முத்திகிட்டும் என்ற நம்பிக்கையும் உண்டு.

அங்குமிங்குமாக சந்நியாசிகள், கடைகள், நூற் றுக்கணக்கான சிறுகோயில்கள் உண்டு. ஒரே ஒரு தமிழ்க்கடையில் தமிழில் பேசி உருத்தி ராட்சமாலை வாங்கினோம்.

**நாராயணன் கோயில்:**

நாரன்-வெள்ளை நிற நீர்- அயனம் என்றால் இடம்- வெண்பாற்கடலில் இருப்பவர் என்ற பொருள் இக்கோயிலில் பெரிய தடாக மொன்றில் சுமார் 20 அடி நீளமுள்ள நாரா யணன், ஆதிசேடன் மீது சயனித்த கோலத்திலிருக்கிறார். மக்கள் வழமைபோல் பாதசேவையே செய்கின்றனர். தாமரை பூக்களாலும் மலர்களாலும் இலைகளாலும் பாதத்தை பூசித்து, தடாகத்தின் நீரை மேலே தெளித்து வீழ்ந்து வணங்கி செல்கின்றனர். நாங்களும் வரிசையில் சென்று தரிசித்தோம். இக்கோயிலை பசுபதிநாத் கோயிலிலிருந்து காரில் சென்று தான் அடைந்தோம்.

**படான் நகரம்:**

ஆயிரம் தங்கக் கூரைகள் என்று கூறும் காட்மண்டுவில் இருக்கும் புராதன அரசர் ஆண்ட நகரம். அரண்மனைகள் பெரிதளவில் இருந்தன. ஆனால் உட்சென்று பார்க்க முடியவில்லை. இங்கு பல விழாக்கள் முடிசூடும் வைபவங்கள் நடந்தனவாம். இதைவிட இந்நகரிலுள்ள கோயில்கள் தான் எமைக் கவர்ந்தன. மனைவியரோடு இருக்கும் பிள்ளையார், அநுமான், நரசிம்மர். நேபா ளத்தில் நரசிம்மருக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். பெரிய கோயில்களாக சிவன், விஷ்ணு, கண்ணன், வீமன் கோயில்கள் இருக்கின்றன. மதிய நேரமாதலால் ஒரு சிவன் கோயிலில் நடந்த பூசையில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்தது. இதே போன்று டார்பார் சதுக்கமும் (Darbar Square) உண்டு. இங்கும் அநேகமான இந்துக் கோயில்கள் யாவற்றையும் புராதன கட்டடமாகப் பேணி வருகின்றனர்.

**இந்து மாளிகை:**

நேபாளத்து முடியாட்சி முடிந்தவுடன் பழைய அரண்மனையைப் பொதுப் பார்வைக்கு வைத்திருக்கின்றனர். அரசனை நாரயணன் அம்சமாகவே கருதி வந்தனர். இதனாற் போலும் அரண்மனைக்கு Narayanhity Royal Palace என்று பெயரிட்டனர். இதை தற்போது Narayanhity Palace Museumஎனப் பெயரிட் டுள்ளனர். சென்று பார்க்க கட்டணம் உண்டு. மாளிகையின் மேற்கு பகுதியை மட்டும் பார்வைக்கு வைத்திருக்கின்றனர். இரு பெரிய சிங்கங்கள் வரவேற்கின்றன. படிகளின் மீது சென்றவுடன் விசாலமான பொதுக்கூடம். இங்கு சிவனின் ரூபங்களுக்கு குறைவில்லை. வெளிப்பிரமுகர் விஜயம் செய்தால் அவர்கள் ‘சத்யபிரமாணம்’ எடுக்கும் இடம், தங்கும் இடம்,

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 17



குடும்பம் தங்குமிடம் யாவும் கண்டோம். புது அநுபவம். இந்து சமய சிவன், விஷ்ணு, காளி, அநுமான், யாவும் எங்கும் நிறைந்தன. புத்தர் பகவானின் சிலைகளும் உள. அரசனின் தங்க முலாம் பூசிய சிம்மாசனம், அலுவலகம், மகாநாடு நடத்தும் இடம் உரையாடும் இடம் யாவும் இந்துக் கடவுளோடு சம்பந்தப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

புத்த கோயில்களும் இங்கு உண்டு. பெரிதளவில் விகாரை போன்று பௌத்தநாத் என்ற கோயிலும், மலைமீது 'சுயம்புநாத்' என்ற விகாரையும் உளது. இந்து மக்கள் இவற்றையும் வேறுபாடின்றி தரிசிக்கின்றனர்.

**எவரெஸ்ட் சிகரம்:**

உலகத்தின் உச்சிக்கு செல்ல வேண்டுமானால் நேபாளத்திற்கு தான் செல்லல் வேண்டும். 160 டொலர் கொடுத்தால் சிறுவிமான மூலம் காணலாம். எவரெஸ்ட் ஒரு மலைத்தொடரில் உண்டு. ஒரு மலையை 'கௌரி சங்கர்' எனக் கூறினர். எவரெஸ்ட் சிகரத்தை நேபாள தேசத்தினர் (Sagarmatha) சகர்மாதாவென கூறுகின்றனர். விமான ஓட்டி அமரும் இடத்திற்கு (cockpit) சென்று அவர்களுடன் கதைக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. எவரெஸ்ட் பனிமலையாக ஒரு (Pyramid) போன்ற முக்கோண உச்சியாக காணப்பட்டது. பார்த்தால் பரவசம் தான். இறுதியில் வாழ்க்கையில் ஒரு முறை தான் வரும் அநுபவம்- (இளமைபோல்) (Once in a life time experience!!) அதைப் பெற்றார் என சான்றிதழ் (Certificate) கூட தந்தனர்.

**புத்தர் பிறந்த இடம் - லும்பினி:**

புத்தர் என்றால் ஞானம் பெற்றவராகும். இந்துவாக வைகாசி பூரணையில் சித்தாத்தர் எனும் பெயருடன் பிறந்தார். தாயார் மாயாதேவியரை ஏழு நாள்களில் இழந்தார். கபிலவஸ்து அரண்மனையில் வளர்ந்து யசோதராவை மணந்தார். மனைவியையும் மகன் ரகுலனையும் அரச சுகபோக வாழ்க்கையையும் துறந்து சென்றார். பின்னர் இந்தியாவிலுள்ள பீகார் மாகாணத்திலுள்ள'கயை'யில் ஞானம் பெற்றார்.

லும்பினி, இந்துக்களுக்கு காசி போன்றும் முஸ்லீம்களுக்கு மெக்கா போன்றும், புத்தர்களுக்கு இருக்கிறது. காரில் சென்று தான் இந்தியாவுக்கு அருகே இருக்குமிடத்தை அடைந்தோம். முதலில் Royal Budha Temple என்ற வாசகத்தை கண்டோம். பின்னர் சமீபத்து செல்ல 'பஞ்சசீலர்', ஐந்து உண்மைகள் - கொள்கைகள் கொண்ட கல்வெட்டைக் கண்டோம். பஞ்சசீலர் என்பது அமைதியான முறையில் வாழ வகுக்கும் ஐந்து வழிகள் ஆகும். பின்னர் வெள்ளை விகாரையை கண்டோம். விகாரையில் நாலாபக்கமும் இரு கண்கள். இவை புத்த பகவானின் தாமரைக் கண்கள். அவரின் அருட்பார்வை எங்கும் வியாபித்திருப்பதாக நேபாள மக்கள் நம்புகின்றனர்.

உட்சென்றதும் 'ஆசையே துன்பத்திற்கு அறிகுறி' என்றவரின் பிறந்த இடத்தைக் கண்டோம். பிரம்மனிடம் மாயாதேவி பிள்ளையைப் பெற்ற போன்ற பீடம்; கீழே நிலத்தில் பிறந்த இடம். மகாத்மா காந்தி பிறந்த இடத்தை பார்த்த ஞாபகம் உடன் வந்தது. இந்த இடத்தை வணங்கி தரிசித்து திரும்பினோம்.

நேபாள இந்து இராச்சியத்தின் தேசியக் கொடி முக்கோண அடையாளமுள்ளது.

1. இந்துக்கள் செய்ய வேண்டிய தர்மம்
2. கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம்
3. இந்து மதத்தின் புண்ணிய காரியங்கள்

என்பதைச் சித்திரிக்கின்றது அந்த முக்கோணம்.

**கோயில் வண்ணப்படம் பக்கம் 29**

மிருகங்கள் பசிக்கு உணவு வேண்டியபோது மட்டுமே
மற்றைய மிருகங்களைக் கொலை செய்கின்றன.
**மனிதனோ கொலையே தொழிலாகக் கொண்டு வாழ்கிறான்!**

# படித்தவர் பகன்றவை

சைவசமய இதழான கலசம் தரத்தில் உயர்ந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. விசேஷமாக, சித்திரைப் புத்தாண்டுடன் வெளிவந்த இதழில் எல்லாக் கட்டுரைகளுமே பயனுள்ளதாக அமைந்தன. ஆசிரியர் தலையங்கம் அவற்றுக்கு மகுடம் சூட்டுவதாக இருந்தது. எங்கள் சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகளை ஒரு அருமையான உதாரணம் காட்டி ஆசிரியர் புரியவைத்திருக்கிறார்.
கந்தபுராணத்தில் பொதிந்திருக்கும் தத்துவங்களை இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் இணைத்துக் கூறிச்செல்கிறார் கட்டுரையாளர் முனைவர் சிவலோகநாதன் அவர்கள். இதுவரை புராணங்கள்தானே என்று ஒதுக்கியவர்களையெல்லாம் ஆர்வத்துடன் புராணக்கதை உற்றுநோக்க வைக்கிறது.

“இமயம்” பயணக்கட்டுரை வாசித்தவர்களும் இமயம் போய்வந்த உணர்வை அநுபவிக்கும் வகையில் டாக்டர் கதிர்காமநாதன் எழுதிச்செல்கிறார். இம்முறைக் கலசத்தில் சிறிது நகைச்சுவையும் சேர்ந்திருப்பது ரசிக்கத்தக்கது.
**ஆண்டாளைப்பற்றிய பகுதியில் திருப்பாவையில் இருபது பாடல்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் திருப்பாவை முப்பது பாடல்களைக் கொண்டது. ஆண்டாள் திருமால்மீது பாடிய மொத்தப்பாடல்கள் 243ஆகும்.**

**திருமதி மனோகரன், லண்டன்.**

# கோயிற் பூசைக்குத் தகுதியானவர்.

தேவாலயத்திலே செயற்பாலனவாகிய பிரதிட்டை பூசை உற்சவம் முதலிய கிரியைகள் எல்லாவற்றையும் விதிக்கும் நூல்கள், ஆகமங்கள். ஆகமங்களை ஓதி உணர்ந்தவர்களே தேவாலயங்களில் கிரியைகளை விதிப்படி செய்ய வல்லவர்கள். தீட்சை பெற்றவர்களே ஆகமங்களை ஓதி உணர்தற்கு யோக்கியர்கள். பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்பவர்களாய் ஈசுரபத்தியும் குருபத்தியும் அடியார்பத்தியும் உடையவர்களாய் உள்ளவர்களே தீட்சை பெறுதற்கு யோக்கியர்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும் பத்தியும் உடையவர்களாய் தீட்சை பெற்றவர்களாய் ஆகமங்களைக் குருமுகமாக ஓதி உணர்ந்தவர்களாய், ஆகமக் கிரியைகளை மந்திரத்தோடும் பாவனையோடும் விதிப்படி செய்யப் பயின்றவர்களாய் உள்ளவர்களே தேவாலயக் கிரியைகளைச் செய்தற்கு யோக்கியர்கள். தீட்சையும் ஆகம உணர்ச்சியும் உடையவர்களேயாயினும் நல்லொழுக்கமும் பத்தியும் இல்லாதவர்களாயின் அவர்களாற் செய்யப்படும் கிரியைகளினாலே கடவுள் சாந்நித்தியராகார் என்பது ஆகம நூற்றுணிபு.

**நன்றி: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் - தேவாலயம்**

**கோயில்களிலே தேவாரம் பாடுபவர்களும் இதுபோல இருக்கலாமே என்று அங்கலாய்க்கிறார் பலமுறை முயன்றும் கோயிலிலே தேவாரம் பாடச் சந்தர்ப்பம் கிடையாத ஒரு பத்தர்.**

# ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதிக்கு வருகை புரிந்தோர்



குருமகா சந்நிதானம்,
நல்லூர் ஆதீனம் -யாழ்ப்பாணம்



ஸ்ரீ சைதன்யானந்த நாத சரஸ்வதி
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கோயில் நீயூயோர்க்



திரு. தனபாலா அகில இலங்கை
இந்துமாமன்றம் - கொளும்பு



சொல்வித்தகர் வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்
- கொளும்பு

ekalasam-70:Layout 1  20/10/11  17:48  Page 20



# ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம்

## 105 Denmark Street, Possilpark, Glasgow G22 5EU

எமது ஆலயம் கிளாஸ்கோ நகரத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ளது. எனவே கிளாஸ்கோ நகரப் பேருந்து நிலையத்திலிருந்து (Buchanan Bus Station) மிக எளிதாக ஆலயத்திற்கு வரக் கூடியதாக இருக்கின்றது. 8, 54, 75 இலக்கப் பேருந்துகள் ஆலயத்திற்கு அண்மையில் வருகின்றன. அதிலிருந்து 5 நிமிடத்திற்கும் குறைவான நடைத்தூரத்தில் ஆலயம் அமைந்துள்ளது.

அதேசமயம் ஸ்கொட்லாந்திற்கு வெளியே இருந்து வருபவர்கள் புகையிரதமாயின் நகரத்தில் அமைந்துள்ள Glasgow Central என்ற புகையிரத நிலையத்திற்கு வந்து பின்பு பேருந்திலோ அல்லது வாடகை மோட்டார் வண்டியிலோ இலகுவாக ஆலயத்திற்கு வரலாம். வாடகை மோட்டார் வண்டியாயின் Springpark Health Centre என்ற இடத்துக்குப் பக்கத்தில் என்று அடையாளம் கூறினால் இலகுவாக வரக்கூடியதாக இருக்கும்.

விமானத்தில் வருபவர்கள் Glasgow விமான நிலையத்திற்கு வந்தால் இலகுவாக இருக்கும். அங்கிருந்து 20 நிமிடத்திற்குள் கிளாஸ்கோ நகரத்திற்கோ அல்லது ஆலயத்திற்கோ நேரடியான பேருந்தில் Buchanan Bus station னுக்கோ அல்லது வாடகை மோட்டார்வண்டியிலோ நகரத்திற்கு வந்து கொள்ளலாம். Prestwick விமான நிலையத்திற்கு வந்தால் நகரத்திற்கு வருவதற்கு 40 நிமிடங்கள் எடுக்கும். Prestwick விமான நிலையத்திலிருந்து Glasgow Central நிலையத்துக்குப் புகையிரத வசதியுள்ளது. கிளாஸ்கோ நகரத்திற்குள் தங்குமிட வசதிகள் செய்து கொள்வது இலகுவாக இருக்கும்.

***தற்போது ஆலயம் திறக்கும் நேரங்கள்:***
***வெள்ளி பிற்பகல் 5 மணி தொடக்கம் 8 மணிவரையும்***
***ஞாயிறு நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையும்.***
*விசேட நாள்களில்: வார நாள்களாயின் பிற்பகல் 5மணி தொடக்கம் 8 மணிவரையும்*
*வார இறுதி நாள்களாயின் மதியம் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரையும்.*

தொடர்புகளுக்கு: திரு. இராஜதிலகன் ஜீவராஜமுதலியார் - தலைவர்
01416300358/07584495926

திருமதி. விக்னேஸ்வரி ஸ்ரீகரன் செயலாளர்
01415582373

*அஞ்சல் முகவரி:*
**Mr. J.Rajathelakan (Chair Person)**
**Sri Mangala Vinayahar Community Centre**
**Flat 1/1**
**266 Aden Craig Road, Castlemilk, Glasgow**
**G45 0PY**
***மின்னஞ்சல்:*** **srimangalam@hotmail.com**
***மின்னம்பலம்:*** **www.vinayaharglasgow.com**

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 21



உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**செப்டெம்பர் (28-09-2011) தொடக்கம் டிசம்பர் (31-12-2011) வரை**

| | | |
|---|---|---|
| *28.09.2011* | புதன் | நவராத்திரி பூசை ஆரம்பம் |
| *05.10.2011* | புதன் | சரஸ்வதி பூசை |
| *06.10.2011* | வியாழன் | நவராத்திரி பூசை நிறைவு |
| *10.10.2011* | செவ்வாய் | நடேசர் அபிஷேகம் |
| *27-10-2011* | வியாழன் | கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| *31.10.2011* | திங்கள் | கந்தஷஷ்டி விரத நிறைவு |
| *18.11.2011* | வெள்ளி | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை |
| *11.12.2011* | ஞாயிறு | விநாயகர் விரதம் |
| *30.12.2011* | வெள்ளி | திருவெம்பாவை ஆரம்பம் |
| *08.01.2012* | ஞாயிறு | நடேசர் அபிஷேகம், ஆர்த்ரா தரிசனம் |

விசேஷ அறிவித்தல்: ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.


தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 22



## அலங்கார உற்சவம் 19.06.2011





## நாவலர் தமிழ்க் கலைநிலையம் – 03.07.2011
## கலைவிழா நிகழ்வுகள்











ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 23



# நடராஜர் அபிஷேகம் 10.09.2011













ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 24



# சாக்கிய நாயனார் - சிறப்புலி நாயனார்

மு. சிவராசா

இவ்வுலக மக்களை இரு வகையினராகப் பிரிக்கலாம். ஒன்று நல்லவர்கள். மற்றது அல்லாதவர்கள்; நல்லவரல்லாதவர்கள். நல்லவர்களாகத் தோன்றுவது சகசம். அவர்கள் பலவேறு தேவைகளை அடைதற்காக அவ்வாறு வேடம் போடுவார்கள். நல்லவர்கள் தீயவர்களாக நடிப்பது அபூர்வம். இறைவன் மட்டும் அவ்வாறு தீயவராக வருவது தன் அடியவர்களைச் சோதனை செய்யும் பொருட்டு என்பதைப் புராணங்களில் பரக்கக் காணலாம். மெய்யெலாம் நீறுபூசி, வேணிகள் முடித்துக் கட்டி, கையினில் படை கரந்து புத்தகக் கவுளி ஏந்தி, மனத்தினுள் கறுப்பு வைத்து பொய்த் தவ வேடம் கொண்டு வந்தே முத்தநாதன் மெய்ப் பொருள் நாயனாரைக் கொலை செய்தான். வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன் கொண்டு ஏனாதி நாதரைக் கொல்ல வந்தான் அதிசூரன். இவை பெரிய புராணத்தில் கூறப்படுபவை. இவை போன்ற இன்னும் பல நிகழ்வுகளை அங்கு காணலாம்.

இவற்றுக்கு மாறான நிகழ்வு சாக்கிய நாயனார் புராணத்தில் விவரிக்கப்படுகின்றது. திருச்சங்க மங்கையில் அவதரித்து பல்லுயிர்க்கும் அருள் உடையவராய், பிறவிப் பிணியின் நீங்க வழி தேடியவர் பலவேறு சமய சாத்திரங்களையும் படித்து ஈற்றில் சாக்கிய மதத்தை தழுவி அதில் போற்றப்படும் சாத்திர தோத்திர நூல்களைப் படித்தார். அவற்றை ஓதி உணர்ந்து அவை தமது எண்ணத்தை நிறைவேற்ற உதவா என்பதையும் உணர்ந்தார். 'செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்' என்பதை உணர்ந்தவராய், தாம் தழுவிய சாக்தமட வேடத்தைத் துறவாதே இறைவனை வழிபடலானார். "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்ற உண்மை அவர் மனத்தில் பதிந்தது. அதனால் கொண்ட கோலத்தைத் துறவாமலே சிவவழிபாடு செய்யத் தீர்மானித்தார்.

இந்நிலையில் மாலும் அயனும் தேடும்படி சேணாரும் தழற்பிழம்பாய் தோன்றிய சிவலிங்க வடிவை மனத்தில் வரித்துக் கொண்டு நாள்தோறும் சிவலிங்க தரிசனை செய்தே உணவு கொள்ளுவது என்ற உறுதி அவரைக் குடிகொண்டது. வழியில் வெள்ளிடை மன்னும் சிவலிங்கம் ஒன்று அவர் கண்ணில் புலப்பட்டது. மன மகிழ்வுடன் அதனைப் பூஜிக்க விழைந்த நாயனாருக்கு அந்த இடத்தில் பத்திர புட்பம் கிடைக்கவில்லை. நிலத்தில் கிடந்த ஒரு கூழாங்கல்லை எடுத்து அதையே மலராகப் பாவித்து சாத்தும் பொருட்டு இலிங்கத்தின் மீது எறிந்தார். எறிந்த பின்பே தனது செயலின் புறத்தோற்றம் என்னவெனத் தெரிந்தது. இருந்தும் அது இறைவன் உள்ளூற இட்ட ஆணை எனக் கொண்டு அதனையே தினமும் தம் வழிபாட்டு நெறியாகக் கொண்டார். தவறாது நாள்தோறும் உணவு உண்பதற்கு முன்னர் அச் சிவலிங்கத்துக்கு ஒரு கல் எறிந்து வழிபடுவோராயினார். சாக்கிய நாயனார் இறைவன் மீது கல் எறிந்தார். யோக நிலையிலிருந்த சிவன் மீது மன்மதன் விடுத்த மலர் அம்பு 'நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு வில்லோன் மலரோ விருப்பு' (நல்லோன் -சாக்கிய நாயனார், சிலை-கல், கருப்பு வில்லோன்-மன்மதன்) இறைவனுக்கு விருப்பம் தரக்கூடியது எது என்பதை யாரும் அறிவர்.

இவ்வாறாக நாள்தோறும் வழிபாடாற்றி வந்த நாயனார் ஒரு நாள் மறதியாக உணவு கொள்வதற்கு ஆயத்தமான நிலையில் திடீரென நினைவு வரவே எழுந்து சிவலிங்கத்தை அடைந்து வழிபட்டார். ஈசன் காட்சி கொடுத்தருளித் தன் பாதங்களில் சேர்த்துக் கொண்டான். உண்டிவினை ஒழித்தஞ்சி ஓடிவரும் வேட்கை கண்ட ஈசன் வேறென்ன செய்ய முடியும்?

**சிறப்புலிநாயனார்**- பிறவிக்கடலைக் கடக்க புணையாக இருப்பவை குரு, லிங்க, சங்கம வழிபாடுகளாம். தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பர். சற்குரு ஒருவர்க்குக் கிடைப்பாராயின் அவரே புணையாகப் பிறவிக் கடலை நிச்சயம் கடந்து விடலாம். குருவின் திருமேனி காணல் அவரின் திருநாமம் சொல்லல் அவர் அருள் வார்த்தை கேட்டல் அவர் திருவுருவைச் சிந்தித்தல் ஆகியன ஜன்மசாபல்யம் தரும். இலிங்க வழிபாடு ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை என இருவகைத்து. பூவும் நீரும் கொண்டு மந்திரசகிதம் இஷ்டலிங்க பூசை செய்து கரையேறலாம். சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டுகள் யாவும் சிவனுக்கே செய்வதாகும். இவற்றுள் ஏதாயினும் ஒன்றை மன உறுதியோடு வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்தால் வீடு பேறு நிச்சயம். ஒன்றைக் கடைப்பிடிப்பவர் ஏனையவற்றையும் ஏற்று நடப்பது இயல்பு. இவற்றைக் கடைப்பிடித்து நற்கதியடைந்த நாயன்மார்களுள் சிறப்புலியாரும் ஒருவர். திருவாக்கூரில் அவதரித்த இந் நாயனார் சிவனடியார்க்கு என்றும் இடையறா அன்புடன் செயலாற்ற தேகாந்தத்தில் ஈசன் திருவடி அடைந்தார்.

# தமிழிலே பூசை? - தவம்

தமிழ்ப்பூசை செய்வதைப்பற்றி பெரிய சர்ச்சை எம்மவர்களிடையே கொஞ்சக்காலமாக இருந்துவருகிறது. இப்படிப் பேசுபவர்களுடன் நான் உரையாட நேர்ந்தபோது, அவர்கள், 'குருக்கள் சொல்வது எமக்கு விளங்காததால் எமக்குப் பக்தி வருவதில்லை' என்று சொன்னார்கள். குருக்கள் சொல்லும் மந்திரம் விளங்கித்தான் இவர்களுக்கு பக்தி வரவேண்டும் என்றால், இவர்களுக்கு இந்தப் பிறப்பில் பக்தியே வராது. பக்தி என்பது கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்குத்தான் வரும். இராமகிருஷ்ணர் தம்முடைய சிஷ்யர்களுக்குப் பதில் அளிக்கும்போது, 'எமக்கு மேல் கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை நம் மனதில் இருந்தால், அது நாளடைவில் பக்தியாக மாறும். பக்தி வந்துவிட்டால் பின்பு (மனிதன் வேண்டுவது) எல்லாம் சித்திக்கும்.' என்று சொல்லியுள்ளார். இவ்வாறு நம்முன்னோர் கடவுளை அடைய, பல வழிகளை எழுதி வைத்துள்ளார்கள். பல சமஸ்கிருத ஸ்லோகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. பழயை காலத்திலேயே சமஸ்கிருதச் சொற்கள் தமிழிலே கலந்துள்ளன. இதை மணிப்பிரவாள நடை என்பர். உற்றுக் கவனித்தால் குருக்கள் சொல்வதில் பாதியை நல்ல தமிழ் அறிவுள்ளவர்கள் விளங்க முடியும். உதாரணமாக, நாம் 'கந்தா போற்றி, கடம்பா போற்றி' என்பதை குருக்கள் 'ஸ்கந்தாயநம, கடம்பாய நம' என்று சொல்கிறார். சமஸ்கிருத மந்திரங்களை (சரியாக) ஓதும்போது அவை ஏற்படுத்தும் ஒலிகளால் ஏற்படும் அதிர்வுகளுக்கு கிரகங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டென்று சொல்கிறார்கள்.

ஒவ்வொரு தெய்வங்களையும் வழிபடும்போது ஓத, பல தமிழ் திருப்பாடல்கள் கையடக்க நூல்களாக வெளிவந்துள்ளன. இவற்றை வாங்கிப் பாராயணம் பண்ணி பக்தியை வளர்த்துக்கொள்ளலாம். அதை விட்டுவிட்டு, கடையில் வாங்கும் பொருள்போல பக்தியைக் கோயிலில் போய் வாங்கிவிடலாம் என்று எண்ணுவது புத்திசாலித்தனமாக எனக்குப் படவில்லை. இது தவிர, வேற்று மொழி பேசும் இந்துக்கள் பலரும் எம்முடைய கோயில்களுக்கு வருகிறார்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

ஒரு மொழியைக் கற்பதால் எமக்கு நன்மை உண்டே தவிர நட்டம் இல்லை. வால்மீகி இராமாயணத்தில் வரும் ஸ்லோகங்களுக்கு (பாடல்களுக்கு) தமிழில் மொழிபெயர்ப்புள்ள புத்தகம் ஒன்றை நான் படித்தேன். எவ்வளவு சுவையான பாடல்கள் என்று மிகவும் இரசித்தேன். மொழிபெயர்ப்பிலேயே இவ்வளவு சுவையென்றால்......,! சமஸ்கிருதத்தையே கற்று மூலத்தைப் படித்தால் எப்படி இருக்கும் என்று நினைத்தேன்.

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 26



# நாவலர் தமிழ்க் கலைநிலையம் – 03.07.2011
# கலைவிழா நிகழ்வுகள்


























ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 27





















ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 28



சமயங்கள் தாம் தாம் கொண்டாடும் தெய்வங்களுக்கு உருவம், குணம் முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டாடும். ஆனால் பரம்பொருள் குணங்குறிகளைக் கடந்து விளங்கும்.

**'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்**
**இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'**
என்கிறார் அப்பர் பெருமான்.

சைவர்கள் சிவலிங்க வழிபாடு செய்பவர்கள். அவர்களுள் சிலர் சிவலிங்க தாரிகள்- சிவலிங்கம் தரித்திருப்பவர்கள்.

சிவலிங்கம் சைவத்தின் அடையாளம். மிகப்பழையதான சிந்துவெளிநாகரித்தின் சின்னங்களுள் சிவலிங்கம் காணப்பட்டது.

சிவலிங்கம் ஓம் உருவமாக இருந்தாலும் உலகில் நாம் காணும் வேறெந்த உருவத்தையும் அஃது ஒத்திருக்கவில்லை. ஆக, அது அருவம், உருவமாயும் அருவமாயுமிருப்பது.

# இறைவன் விரும்பியது எதை?

- சோ-பத்மநாதன் -

**'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்**
**நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்'**

இந்தச் சிவலிங்க வழிபாடு செய்த ஒருவருடைய வரலாற்றைப் பார்ப்போம். இவர் திருச்சங்கமங்கை என்ற ஊரிற் பிறந்தவர். இளமையிலேயே நல்லறிவு வரப்பெற்றவராக மாறி மாறி பிறந்தும் இறந்தும் வரும் இந்தச் சூழலிலிருந்து விடுபடும் வழி எது என்று சிந்தித்தார். அக்காலத்தில் கல்விக்குப் பேர்போன இடமாய் விளங்கிய காஞ்சிபுரம் போனார். பௌத்த ஆகமங்களை முறையாகக் கற்றார். ஆசையே பிறவிக்குக் காரணம் என்பது பௌத்தத்தின் கோட்பாடு. ஆசையை விட்டால் பிறவித் தொடர் அறுந்துவிடும் என அறிந்து பௌத்தராகின்றார். எல்லாம் சரி. இதில் கடவுளுக்கு இடமில்லையே. இந்த இடைவெளி சாக்கியரை உறுத்திக் கொண்டிருந்தது.

செய்வினை செய்பவன் அதன் பயன் பயனைத்தருபவன் என்ற இந்நான்குக்கும் சைவம் அல்லாத சமயங்களில் இடமில்லை என்று சாக்கியர் தெளிந்தார். சிவமே தெய்வமென்று பற்றிக்கொண்டார்.

ஆனால் அவர் தான் பௌத்தராகி பௌத்தர் கூட்டத்தில் அல்லவா இருக்கிறார்? சிவனை வழிபட ஒருவழி கண்டார். பௌத்த வேடத்தை மாற்றாது, ஒவ்வொருநாளும் உணவருந்து முன் சிவலிங்கத்தை மனதால் வணங்கி ஒரு கல்லை எடுத்து அதன் மீது எறிவார். பார்க்கும் பௌத்தர்களுக்கு இவர் சைவ வழிபாட்டு முறையை இகழ்வதாகத் தென்படும். சாக்கியருடைய 'வழிபாடு' இந்த விதமாகத் தொடர்ந்தது.

ஒருநாள் கல்லெறிய மறந்து போனார். உணவருந்த அமர்ந்தவருக்கு தம் 'தவறு' நினைவு வந்தது. பதறிப்போனார். 'பெருமானை நினைந்த கல்லெறிய மறந்தேனே!' என்று மனம் நொந்தார். எழுந்து

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 29



சிவலிங்கத்தை நோக்கி ஓடினார். உணவை ஒழித்து தம்மீது கொண்ட ஆரா அன்பினால் ஓடிவரும் சாக்கியரை கருணையோடு நோக்கிய சிவபெருமான் உமாதேவியாரோடு அவர் எதிரே தோன்றினார்.

அற்புதமான இந்தக் கதை பெரியபுராணத்தில் வருகிறது. பக்திமேலிட்ட நிலையில், இறைவன் திருவடியில் செருப்பும் ஏறியிருக்கிறது. சிவலிங்கம் கல்லெறியும் படிட்டிருக்கிறது. பக்தி உலகியல் நடைமுறைகளைக் கடந்தது.

சிவன் மீது மலரம்பை எய்த மன்மதன், அவன் கோபத்துக்காளாகிச் சாம்பலானான். கல்லெறிந்த சாக்கியனோ அருள் பெற்றுய்ந்தான். செயலை அதன் அளவில் மதிப்பிடாமல் அ∴து எந்நோக்கத்தோடு செய்யப்பட்டது என்று ஆராய்ந்து மதிப்பிட வேண்டும். அகத்தே வெறுப்பை அல்லது

**'உள்ளத்தில் வஞ்சமில்லாதார் பேசும்**
**வன்சொல் இனியது' என்கிறார் சிவப்பிரகாசர்.**

**மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்**
**பேசுற்ற இன்சொல் பிறிதென்க - ஈசற்கு**
**நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு**
**வில்லோன் மலரோ விருப்பு'**

(நல்லோன்-சாக்கியன், கருப்புவில்லோன்-மன்மதன்)

தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த எழுபதாவது கலசம் இதழ் காலந்தாழ்த்தி வெளிவருகிறது. அதற்காக எமது வாசக அன்பர்களுக்கு வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

**கலசம்**
**KALASAM**
இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :.......................................................................................
முகவரி :.....................................................................................
..................................................................................................
..................................................................................................
..................................................................................................

Donation: £..................
Postage: £..................
Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB
kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 30



# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்வியற் பணிகள் நூல் வெளியீட்டு விழா –26.07.2011












ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 31



# பசுபதிநாத் கோயில் – நேபாளம்

## (இமயம் பயணக்கட்டுரை)



ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 32





# திருமுறைகளில் திருமால்

**- ச.வேதநாராயணன் -**

சென்ற முறை நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்களைக் கண்டோம். நம் திருமுறைகளிலும் பிரமனைப் பற்றியும் திருமாலைப் பற்றியும் பல இடங்களிலே கூறப்பட்டுள்ளன.

பாற்கடல் அலைமேலே பாம்பணையின் மேலே பள்ளி கொள்ளும் கார்வண்ணன் திருமாலின் பிற பெயர்களாகிய நாராயணன், நாரணன், மாயவன், வாமனன், கேசவன், திருமகளின் காதலன் என்பவை இடம் பெறுகின்றன.

திருமால் பன்றியின் வடிவில் ஈசனின் திருப்பாதங்களைத் தேடிச் சென்றது, திருமால் தாமரைப் பூவினால் இறைவனை வழிபட்டது, ஒரு மலர் குறைந்த போது தமது கண்ணையே மலராக இட்டது, சிவபெருமான் சலந்தராசுரனை அழித்த சக்கரத்தைத் திருமாலுக்கு அளித்தது, திரிபுரம் எரித்த சமயத்தில் திருமால் இடபமாக சிவபெருமானைத் தாங்கியது, திருமாலை தமது உடம்பின் ஒரு பாகமாக ஏற்றது ( ஏகபாத மூர்த்தி, சங்கர நாரா யணன் ) போன்ற நிகழ்வுகள் குறிக்கப் படுகின்றன.
கட்டுரையின் அளவைக் கருத்திற்கொண்டு சில குறிப்புக்களை மட்டும் உங்களிடம் பகிர்கிறேன்.

## திருமாலைப் பற்றியக் குறிப்புக்கள்

*01132* வீழிமிழலை *9 1* செந்தளிர் மாமலரோனும் திருமாலும் ஏனமோடு அன்னமாகி
*03362* பரிதிநியமம் *9 1* நாடினர் காண்கிலர் நான்முகனும் திருமால் நயந்து ஏத்த
*04014* தசபுராணம் *10 2* உடன் வழிபாடு செய்த திருமாலை எந்தை பெருமான் உகந்து
*06024* ஆரூர் *5 4* சீரேறு திருமால் ஓர் பாகத்தான் காண் திரு ஆரூரான் காண் என் சிந்தையானே
*06032* தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி
*08012* திருச்சாழல் *15 4* இடபம் அது ஆய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ
*0823316* கோவையார்--அதிகாரம் *23* தேர் வரவு கூறல்-- *326-1* திருமால் அறியாச் செறிகழல் தில்லைச் சிற்றம்பலத்து
*1030640* திருமந்திரம் தந்திரம் *07* ஞானாதித்தன் *2000 3* தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
*1104001* காரைக்கால்அம்மையார்--அற்புதத்திருவந்தாதி *52-3* திருமாலைப் பங்குடையான் செஞ்சடை மேல் வைத்த
பெரியபுராணம்--சம்பந்தர் *1142* பெரும் திருமால் அயன் போற்றும் பெரும்பற்றப் புலியூரில் இருந்த தமிழாகரர்

## நாரணனைப் பற்றி

*01116நீலகண்டம் 9 1* நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாது செய்து
*04081* கருநட்ட விருத்தம் *10 2* வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
*06008* காளத்தி *3 1* நாரணன் காண் நான்முகன் காண் நால்வேதன் காண்
*06053* வீழிமிழலை *2 2* நாரணனை இடப்பாகத்து அடைத்தார் போலும்
*1128001* பட்டினத்துப் பிள்ளையார்--திருவிடைமருதூர் மும்மணிக்கோவை *4 10* நாரணன் அறியாக் காரணக் கடவுள்
பெரியபுராணம்--முப்போதும் திருமேனி தீண்டுவார் *3-1* நாரணற்கும் நான்முகற்கும் அறிய ஒண்ணா நாதனை

*092102* சேந்தனார்--திருப்பல்லாண்டு--கோயில் *12 2* நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்

## மாயன்


*01017* இடும்பாவனம் *9 3* மருளார் தரு மாயன் அயன் காணார் மயல் எய்த
*04043* கச்சிமேற்றளி *7 1* மண்ணினை உண்ட மாயன் மகிழ்ந்தனர் விருத்தராகும்

## பாற்கடல்

*03269* புனவாயில் *9 1* திருவளர் தாமரை மேவினானும் திகழ் பாற்கடல் கருநிற வண்ணனும்
*05019* கடம்பூர் *10 1* பணங்கொள் பாற்கடல் பாம்பணையானொடும்

## கடல் வண்ணன்

*01042* பேணுபெருந்துறை *9 2* பொருகடல் வண்ணனும்
*01078* திரு இடைச்சுரம் *10 2* பெருங்கடல் வண்ணனும் பிரமனும் ஓரா
*04055* வலம்புரம் *9 1* கருவரை அனைய மேனிக் கடல் வண்ணனவனும் காணான்




## திருமகள்

*02205* பாண்டிக்கொடுமுடி *9 1* திருமகள் காதலினானும் திகழ்தரு மாமலர் மேலைப்
*07009* அரிசிற்கரைபுத்தூர் *2 2* திருமகள் கோன் நெடுமால் பலநாள் சிறப்பாகிய பூசனை செய் பொழுதில்

## பிற

*03318* வக்கரை *9 4* வாமனனும் அறியா வகையானிடம்
*04107* கடவூர் வீரட்டம் *9 1* கேசவன் காண்டறிதாய்
*06073* கொட்டையூர் *7 6* மாதவற்கும் நான்முகற்கும் வரதன் கண்டாய்

திருமுறைகளை அகழ அகழ திருமாலைப் பற்றியக் குறிப்புக்கள் மேலும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 34



உ

# சைவ முன்னேற்றச் சங்கம் (U.K)

## பெருமையுடன் அளிக்கும்

# அரங்கேறிய அற்புதங்கள் 2011

Registered Charity
No: 292085



# ARANGERIYA ATPUTHANGAL 2011

**In Aid of our Naalvar Kottam
Orphanage Project
Kalmunai Sri-Lanka**



எமது பணிகளுக்குத் தோள் கொடுக்கும் சங்க ஆதரவாளர்களே!
கலை ஆர்வலர்களே அரங்கேறிய அற்புதங்கள் நிகழ்வு இறையருளால் இவ்வாண்டும் கைகூடுகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகள் நீங்கள் காட்டிய ஆதரவும், கலைஞர்களது அற்புதமான படைப்புகளும் ஒரு சாதனையாகும். இத்தொடரில் இவ்வாண்டும் கலைஞர்களுக்கு நாம் கொடுக்கும் அரிய சந்தர்ப்பம் இது.

**இலங்கை கல்முனையில் அமைந்திருக்கும் எமது 'நால்வர் கோட்டம்' அனாதைச் சிறுவர்களின் இல்லத்தை நடத்துவதற்காக மேற்படி நிகழ்ச்சியை நடத்துகின்றோம். இது எம்மால் முழுமையாக பராமரிக்கப்பட்டு வரும் இல்லச் சிறுவர்களுக்கு நிதி சேர்க்கும் நிகழ்ச்சி. இதற்கு உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.**

***Saturday, 19 November 2011, 6.00 pm***
***at***
***EASTBURY COMPREHENSIVE SCHOOL***
***Rosslyn Road, Barking, Essex IG11 9UH***
***(Entrance via Wilmington Gardens)***

**ADMISSION:**
**Adult: £10.00**
**Children: £5.00**
**(under 12 Free)**



*எம்மால் பாராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளின் எதிர்காலம் உங்கள் கைகளில்...*
*நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு பென்சும் அவர்களின் வளர்ச்சிக்கே!*

*"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"*



**மேலதிக விபரங்களுக்கு:**

**Vaman: 07985 142288**
**Ram: 07956 369557**
**Rabi: 07961 784376**
**Ananth: 07967 157129**
**Bala: 07956 513669**
**Ravi: 07882 857850**




*SAIVA MUNNETTA SANGAM (UK)*
*2 Salisbury Road, Manor Park , London,E12 6AB Tel: 0208 514 4732 www.saivamunnettasangam.com*


ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 35



# தவில் சக்கரவர்த்தி தக்ஷிணாமூர்த்தி (1933 – 1975) விவரணப்படம்

- பத்மநாப ஐயர்

பெங்களூரில் வசிக்கும் கர்நாடக சங்கீத மேதை ஆர்.கே. ஸ்ரீகண்டன் அவர்களுக்கு இந்த வருடத்துக்கான பத்மபூஷண் விருது கிடைத்திருக்கிறது. தாமதமானாலும் (ஸ்ரீகண்டனுக்கு வயது 91), சிறு அங்கீகாரமுமில்லாமல் மறைந்துவிட்ட மேதைகள் எத்தனையோ பேர்களைப் போல் ஆகாமல், இப்போதாவது கௌரவித்தார்களே என்று ஆறுதல்பட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. கர்நாடகாவின் ருத்ர பட்டினம் கிராமத்தின் குடும்பத்தைச்சேர்ந்த R.K. ஸ்ரீகண்டன் மைசூரில் நிலவிய வளமான சங்கீதச்சூழலை நேரில் கேட்டு அநுபவித்துக் கற்ற மேதைகளில் ஒருவர். சிறந்த கர்நாடக சங்கீத வித்வானாகப் பரிமளிப்பது மட்டுமில்லாமல், தேர்ந்த குருவாகவும் விளங்கித் தன் இசைப்பாரம்பரியத்தைப் பல சீடர்களுக்குக் கைமாற்றிக் கொடுத்தவர். அவர் தவில் தட்சணாமூர்த்தி பற்றிக் கூறுவது:



"அரசவையில் நடக்கும் கச்சேரிகளை loudspeaker மூலம் பொது மக்கள் கேட்பதற்காக ஒலிபரப்புவார்கள். நாங்கள் பூங்காக்களில் அமர்ந்து கேட்போம். நாதஸ்வரச் சக்கரவர்த்தி ராஜரத்தினம் பிள்ளை ஒருமுறை நவராத்திரிக்கு வந்திருந்து ஒரு வாரம் வாசித்தார். எப்பேர்ப்பட்ட மேதை, எப்பேர்ப்பட்ட வாசிப்பு! என் சங்கீத ரசனைக்கு நாதஸ்வரக் கச்சேரிகள் பெரிய ஊக்கம் தந்திருக்கின்றன. நாதஸ்வரத்தை ரசித்துக் கேட்டால் அது நம் கற்பனையை வளர்க்கும். அவர்களுடைய வாசிப்புக் கற்பனை அப்படிப்பட்டது. ஒரு ராகத்தை எவ்வளவு நேரம் அவர்கள் வாசிப்பார்கள்! ராக ஆலாபனைக்கு நாதஸ்வரம்தான் மூலம். அங்கப்பபிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை, வீருசாமி பிள்ளை, காருக்குறிச்சி அருணாசலம், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், வேதாரண்யம் வேதமூர்த்தி இவர்கள் வாசிப்பையெல்லாம் நான் கேட்டிருக்கிறேன். மீனாட்சிசுந்தரம், நாச்சியார்கோயில் ராகவ பிள்ளை, சிலோன் தட்சணாமூர்த்தி இவர்களெல்லாம் தவில் வாசிப்பார்கள். சிலோன் தட்சணாமூர்த்தி ஒரு பிறவி மேதை. பெங்களூர் தர்மராயா கோயிலில் நடக்கும் கரகாட்ட விழாவின்போது தவில் வாசிக்க சிலோன் தட்சணாமூர்த்தி வந்திருந்தார். என்ன அபாரமான வாசிப்பு!"

**(நன்றி: சொல்வனம்)**

அக்காலத்தில் பிரபல தவில் மேதையாக விளங்கிய நாச்சியார் கோயில் ராகவ பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து தவில் பயின்றவர் தட்சணாமூர்த்தி. ஒன்றரை ஆண்டு காலப் பயிற்சியின் பின் அவரது குருவான ராகவ பிள்ளை, "உனக்கு இனி சொல்லித்தர என்னிடம் ஒன்றும் பாக்கியில்லை. ஒரு அபிப்பிராயம் காதில் விழுவதற்குள் உனது கைகளில் அது ஒலித்துவிடும்படியான கடவுளின் வரப்பிரசாதம் பெற்ற நீ, ஊருக்குத் திரும்பலாம். மகோன்னதமான பெயரும் புகழும் உன்னை வந்துசேர அதிக காலம் இல்லை" என ஆசீர்வதித்தார்.

திருமெய்ஞ்ஞானம் நடராஜசுந்தரம் பிள்ளை, தர்மபுரம் கோவிந்தராஜ பிள்ளை போன்ற பல்லவி வல்லுநர்கள், தெட்சணாமூர்த்திக்குக் கற்பூர மூளை' என்று போற்றியிருக்கிறார்கள். இரண்டுங்கெட்டான் காலப் பிரமாணத்திலும் தண்ணீர்பட்டபாடு என்பதுபோல் தட்சணாமூர்த்தி வாசிப்பதை எண்ணுகையில், எல்லாம் பிரமிப்பைத்தான் உண்டுபண்ணுகிறது என்று மூத்த நாதஸ்வரக் கலைஞர் சிதம்பரம் ராதாகிருஷ்ண பிள்ளை வியந்து பாராட்டுவதுண்டு. மிருதங்கத்தில் ஒப்பற்றவர்களான பாலக்காடு மணி ஐயரும் பழனி சுப்பிரமணிய பிள்ளையும் தட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பைக் கேட்டுவிட்டு, **"தட்சணாமூர்த்தி உலகத்தின்**

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 36



**எட்டாவது அதிசயம்" என்று மணி ஐயரும், "ஒருமுறை மனதால் நினைத்தாலே நம்மை வியப்பில் ஆழ்த்தும் மேதை" என்று பழனி சுப்பிர மணிய பிள்ளையும் புகழாரம் சூட்டியுள்ளனர்.**

ஒருசமயம் கலைஞர்கள் சிலர் ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்துபோது, பேச்சு தட்சணா மூர்த்தியைப் பற்றித் திரும்பியது. "நம்மை அவர் வாசிப்புப் பிரமிக்கச் செய்கின்றது. ஆனால், சட்டென்று புரிவதில்லை" என்று ஒருவர் சொன்னார். அப்போது, திருத்து றைப்பூண்டி சொக்கலிங்க நாதஸ்வரக்காரர் என்ற முதிர்ந்த கலைஞர், "அவன் வாசிப்பு தெய்வீகமானது. அவனே கடவுளின் அவதாரம் தெரியுமா?" என்றார். அவரைத் தொடர்ந்து, தவில் வித்வான் திருமுல்லைவாயில் முத்துவேற்பிள்ளை, "தட்சணாமூர்த்தி வாசிப் பதைப் புரிந்து கொள்ளும்படியான தவிற்காரன் இப்போதைக்கு எவரும் இருப்பதாக எனக்கே தெரியவில்லை. அவன் வாசிப்பு உனக்குப் புரி யாமலிருப்பதில் அதிசயம் என்ன?" என்று சொன்னார்.

**(பூச்சொரியும் பொன்னொச்சி மரம் என்னும் நூலில் சிவசம்பு கந்தசாமி எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.)**

தவில் வாத்தியத்தில் ஈழத்திலும் இந்தியாவிலும் தன்னிகரற்ற மேதையாகத் திகழ்ந்த தட்சணா மூர்த்தி அவர்கள் மறைந்து முப்பத்தியாறு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அவரது தவில் இசை அடங்கிய ஒரு குறுந்தட்டுக்கூட இதுவரை வெளிவரவில்லை. இந்நிலை இப்படியே தொடருமானால், அந்த மேதையின் பெயரே இசை உலகிலிருந்து மறைந்துவிடும் துயரநிலை ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அண்மையில் இந்தியா சென்றிருந்த போது, தமிழகத்தில் இசைக் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் தட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பைப் பற்றித் தெரிவித்தபோது, "தட்சணாமூர்த்தியுடன் கச்சேரியெனில், அவருடன் வாசிக்க எங்களால் முடியாது" என்று பிரபல தவில் வித்வான்களே மேடையில் அவருடன் வாசிக்க அஞ்சினார்கள்" என்ற அந்த இசை மதிப்பீடு என்னுள் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்தகைய அந்த இசை மேதையின் வாழ்வு குறித்த விவர ணப்படம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என்ற அவா, அந்த உரையாடலின் பின் என் மனதில் வேரூன்றியது.

தட்சணாமூர்த்தி அவர்களுடன் சேர்ந்து கச்சேரிகளில் பங்குகொண்ட கலைஞர்கள், அவரது கச்சேரிகளைக் கேட்டு ரசித்த இசைவாணர்கள் பலர் இன்றும் அவரது மேதாவிலாசத்தை வியந்து பாராட்டுகிறார்கள். 91 வயதான இசை மேதை ஆர்.கே. ஸ்ரீகண்டன் பாராட்டியுள்ளதை ஆரம்பத்திலே குறிப்பிட் டுள்ளேன். தட்சணாமூர்த்தி அவர்களின் அபாரமான வாசிப்பை, இன்றும் தனது முதுமையான வயதில் நினைவுகூரும் ஆர்.கே. ஸ்ரீகண்டன் போன்றவர்களைப் பேட்டி கண்டு, தட்சணாமூர்த்தியின் இசை மேதைமை பற்றிய விவரங்களை ஆவணப்படுத்துவது இன்றைய தேவையாகும். தட்சணாமூர்த்தியின் கச்சேரி களுடன் தொடர்புகொண்ட பதினைந்துக்கும் மேற்பட்ட இசைவாணர்கள் இன்றும் தமிழ கத்தில் உள்ளனர். ஈழத்திலும் பலர் உள்ளனர். இன்னமும் தாமதித்தால், இவர்களில் பலரை நாம் சந்திக்க முடியாமலே போய்விடும்.

மேலும், தட்சணாமூர்த்தி அவர்கள் வளர்ந்த, வாழ்ந்த இடங்கள், அவர்தம் குடும்பத்தினர் நேர்காணல்கள், அவர் கச்சேரி நிகழ்த்திய இடங்கள் போன்ற அம்சங்களையும் தொகுத்து, அவரது இசைவாழ்வை நிரந்தரமாக்குவதற்கு விவரணப்படம் ஒன்றினைத் தயாரிப்பது இன்றி யமையாதது. அவரது இசைப்பதிவுகளைத் தொகுத்து அடுத்த தலைமுறைக்கு அந்த இசையின் மேன்மையைக் கையளிக்கத் தவறின், அது அம்மாபெரும் மேதையின் இசைப்பணிக்கு நாம் இழைத்த துரோகமாக அமையும்.

எனவே, தட்சணாமூர்த்தி அவர்கள் பற்றிய விவ ரணப்படம் ஒன்றினைத் தயாரிப்பதும், அவர் பங்குகொண்ட இசைக் கச்சேரிகளைத் தேடித் தொகுத்து, வெளியிடுவதும் எம்முன் உள்ள தலையாய பணி. இப்பணியில் தட்சணாமூர்த்தி அவர்களின் தவில் இசையில் ஆர்வமும் மதிப்பும் கொண்டிருக்கும் அனைவரும் ஆத்மபூர்வமாக இணைந்து ஒத்துழைக்குமாறு அன்புடனும் பணிவுடனும் வேண்டுகிறேன்.

இதில், அவர் சார்ந்த தகவல்கள், அவர் சார்ந்த தேட்டங்கள் உள்ளிட்ட ஏதோவிதமான ஒத்தாசை புரிய வல்லவர்களின் ஒத்துழைப்பை நாடுகிறேன்.

****

உ
சிவமயம்

# விநாயகர் துதிப்பாடல்கள்

**தொகுத்தவர் - ஞாலக்கோன்**

**மார்கழி மாதம் என்றாலே வழிபாடுகள் நிறைந்த மாதமாகிவிடும். விநாயக வழிபாடு, சிவ வழிபாடு, விஷ்ணு வழிபாடு என்று கோயில்கள் தோறும் வழிபாடுகள் நடைபெறும். விநாயகருக்கு ஔவை பாடிய விநாயகர் அகவல் உண்டு. கீழே வேறு சில அருட்பாடல்களும் உள்ளன.**

பண்ணியம் ஏந்தும் கரந்தனக்கு ஆக்கி பால்நிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி அரதனக் கலச வியன்கரம் தந்தைதாய்க் காக்கி
கண்ணில் ஆணவவெங் கரிபிணித் தடக்கிக் கரசினேற் கிருகையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத்சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்



மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

உச்சியின் மகுடம் மின்ன ஒளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகம் கொண்டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்

எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திட
தடக்கை ஐந்துடை தாள்செவி நீண்முடி
கடக் களிற்றை கருத்துள் இருத்துவாம்

பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோல் பரந்த நீற்றழகு பச்சுடம்பில்
திவள மாதுடன் நின்றாடிய பரமன் சிறுவனைப் பாரதப் பெரும் போர்
தவள மாமருப்பு ஒன்றொடித்தொரு கரத்தில் தரித்துயர் கிரிப்புறத்து எழுதும்
கவள மாகளிற்றின் திருமுகம் படைத்த கடவுளை நினைந்து கைதொழுவாம்

திருச்சிற்றம்பலம்

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 38



ஒவ்வொரு சமயமும் தமது மூலநூல்களின் அடிப்படையில் வழிபாட்டுச் செயல்களைச் செய்துவருகின்றன. சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல். இங்கு குறிப்பிடப்படும் இறைவன் நூல் என்பது மூலநூல். இதில் எந்த விதத்திலும் மாற்றம் செய்ய எமக்கு உரிமையில்லை. இறைவனுடைய நூல் கட்டளை. அதை நாம் ஏற்று இறை கட்டளைக்குப் பணியாற்றவேண்டுமே தவிர, இடைச் சொருகல் என்று எதையும் புகுத்த முடியாது.

அந்த வகையில் ஆகம முறைப்படி கட்டப்பட்ட ஆலயங்களில் ஆதிசைவர்களே பூசை வழிபாடுகளை ஆற்றவேண்டும். இதனை ஆதிசைவ குலோத்பவ என ஆகமம் கூறுகிறது. இங்கு ஆதிசைவர் எனப்படுபவர் பரம்பரை சைவர்களாக இருப்பவர் மாத்திரமன்றி அவர்களுடைய குடும்பங்களும் உறவுகளும் பாரம்பரிய சைவர்களாக இருத்தல் அவசியம். பரம்பரை சைவக்காரரை கோத்திரத்தொடு தொடர்பு படுத்துவார்கள். அத்துடன் உபநயனம் செய்து, சமய தீட்சை, நிர்வாண தீட்சை ஆகியவை பெற்று ஆசார்ய அபிஷேகம் முதலான சமய

# ஆலய வழிபாடும் வேதாகம நெறியும்

**சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா வசந்தன் குருக்கள்**
**கற்பக விநாயகர் கோயில் வால்தம்ஸ்ரோ**

அநுட்டானங்களுக்கு உட்படுத்தப்பட்டவர்களே பரார்த்த பூசை செய்யவேண்டும் என்பது விதியாகும். பரார்த்த பூசை என்பது எல்லோருக்குமாக ஆலயங்களில் நடைபெறும் ஆகம முறையான வழிபாடுகள்.

இவ்வாறு ஆதிசைவர்களாக, வேதாகமங்களை முறைப்படி கற்றவர்களாக, உரிய தீட்சைகளை பெற்றவர்களாகவும் இருப்பவர்களே அந்தணர், பார்ப்பானர், வேதியர், மறையோர், சிவாசாரியர் என்றெல்லாம் குறிப்பிடப்படுபவர்கள். இக் குறிப்புக்களை தமிழ் இலக்கியங்கள் முதற்கொண்டு அனைத்துச் சைவ, வைணவ இலக்கியங்களிலும் காணலாம்.

திருக்குறளில் பார்ப்பபான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் எனவும், அந்தணர் என்போர் அறவோர் என்றும், ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர் என்றும் வெவ்வேறு இடங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம். சிலப்பதிகாரத்தில் நான்மறை முற்றி ஐம்பெரு வேள்வியும் செய்தொழிலோம்பும் அறுதொழில் அந்தணர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதே போன்று பரிபாடல், திருமுருகாற்றுப்படை, புறநானூறு போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலும் தொல்காப்பியம் போன்ற தொன்மையான இலக்கண நூல்களிலும் இச் சொற்களைக் காணலாம். தொடர்ந்து திருமந்திரம், திருமுறைகள், சைவ சித்தாந்த நூல்களிலும் இவ்வாறான சொற்கள் பல்லாயிரக்கணக்கிலே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் முடிவு என்னவெனில் அன்று தொடங்கி இன்றுவரை இவ்வாறு குறிப்பிடப்படும் மரபினர் ஆலய வழிபாட்டுக்கும், வேத வேள்விகளுக்கும் என ஒதுக்கப்பட்டவர்கள். அவர்களை ஒதுக்காது முறைப்படி ஆலய வழிபாடுகளைச் செய்ய உண்மைச் சைவர்கள் விரும்புவார்கள். அத்துடன் வேதங்களையும் ஆகமங்களையும் விளங்கவில்லை என்று ஒதுக்கவோ அல்லது ஒடுக்கவோ அல்லது ஒழிக்கவோ மாட்டார்கள். வேத ஆகம மரபுகளை மாற்ற முனைபவர்கள் இறை நூல்களிலும் இறைவனிலும் நம்பிக்கை இல்லாதவர்களாகவே இருப்பார்கள். அவ்வாறான முயற்சிக்குப் பல முனைவர்களும் முனை கிறார்கள் என்பதுதான் வியப்பாக உள்ளது.

# சிந்திக்க... சில துளிகள்

## பிரம்மாவின் அறிவுரை

பிரம்மா படைப்புத் தொழிலை முடித்திருந்தார். எல்லா உயிரினங்களையும் விடச் சிறந்தவனாக மனிதனைப் படைத்துவிட்டு, ‘உனக்கு ஏதேனும் வேண்டியிருந்தால், கேள்’ என்றார். ‘என்னை மிக்க அறிவுடன் படைத்திருக்கிறீர்கள். இன்னும் என்னை மேம்படுத்தி, யாருமே எனக்கு நிகராக இருக்கமுடியாதவாறு வரம் கொடுங்கள்’ என வேண்டினான்.

பிரம்மா அவனிடம் இரண்டு பைகளைக் கொடுத்து ‘ஒரு பையை உன் கழுத்தின் முன்பக்கமாகவும், இன்னொன்றைப் பின்பக்கமாகவும் தொங்கவிடு. முன் பக்கத்தில், மற்றவர்களிடமுள்ள நல்ல குணங்களைக் கண்டறிந்து, நல்லவற்றைக் கற்றுக்கொள். உன் சிறப்புக்களைக் கண்ணுக்குத் தெரியாதவாறு பின்புறப் பையில் வைத்துக்கொள். நன்மை உண்டாகட்டும்’ என அருளினார்.

மகிழ்ச்சி அடைந்த மனிதன் பைகளைப் பக்கம் மாற்றித் தொங்கவிட்டான். தன் குணங்களைப் பற்றிப் பெருந் திருப்தியடைந்து, மற்றவர்களிடமிருந்து நல்லதைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதையே மறந்துவிட்டான். அவன் அறிவு எல்லைக்கு உட்பட்டதாகவே இருந்துவிட்டது. அவன் தன்னுடைய பார்வையில் மட்டுமே அறிவாளி! மற்றவர்கள் அவனை ஒரு முட்டாளாகவே கண்டனர்.

நம்மிற் பலரும் தற்பெருமை என்ற பொறியிலே அகப்பட்டுள்ளோம். நல்லவற்றைக் கற்று நம் அறிவைக் கூர்மையாக்கிக் கொள்ளாமல், தற்பெருமைக்குப் பலியாகி சுய புராணத்தைத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் நேரங்கடத்திகளாகத் தயாராகிறோம்.

**கே நிருபமா,**
**நன்றி: மங்கையர் மலர்**

## On Vegetarianism......

**Count Leo Tolstoy:**
"Vegetarianism serves as a criterion by which we know that the pursuit of moral perfection on the part of humanity is genuine and sincere."

**Leonardo da Vinci:**
"The time will come when men such as I will look upon the murder of animals as they now look on the murder of men."


**Socrates:**
"The highest realms of thought are impossible to reach without first attaining an understanding of compassion."

**Albert Einstein:**
"Our task must be to free ourselves… by widening our circle of compassion to embrace all living creatures and the whole of nature in its beauty."

**Mahatma Gandhi:**
"The greatness of a nation and its moral progress can be judged by the way its animals are treated."

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-



அன்று வெள்ளிக்கிழமை காலை. சூரியன் ஆறரை மணிக்கு தனது ஒளிக்கதிர்களை கிழக்கு வானத்தின் அடியில் பரப்பத் தொடங்கிவிட்டான். பெரிய வெள்ளிக்கிழமை (Good Friday) விடுமுறை நாள் ஆதலால் வீட்டில் அனைவரும் சாவகாசமாக உறங்கிக் கொண்டிருந்தனர். தாத்தா மட்டும் ஆறுமணிக்கே எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கடவுளை வணங்கி பாட்டி கொடுத்த தேநீரைப் பருகிக் கொண்டே வழக்கம் போலத் தனது புத்தகங்களுடன் (தேவாரம், திருக்குறள், சஞ்சிகைகள்) சோபாவில் அமர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறார். ஒன்பது மணி யளவில் தான் கண்ணனும் மற்றவர்களும் தங்கள் தேநீர்க் கோப்பைகளுடன் அங்கு வருகி றார்கள்.

**கண்ணன்:** வணக்கம் தாத்தா! நீங்கள் எத்தனை மணிக்கு எழும்பினீர்கள்?

**தாத்தா:** வணக்கம் கண்ணா! நான் வழங்கம் போலக் காலை ஆறுமணிக்கே எழுந்துவிட்டேன்.

**கண்ணன்:** ஏன் தாத்தா, விடுமுறைநாள்களில் எங்களைப் போல கொஞ்ச நேரம் கூட நித்திரை கொள்ளலாம் தானே.

**தாத்தா:** எனக்கு அதற்கு மேல் தூங்க முடியாது கண்ணா! இப்போ சூரியனும் அதிகாலையில் உதித்து விடுகிறதே. குளிர்காலமென்றால்தான் படுக்கையை விட்டெழும்பச் சிரமமாக இருக்கும்.

**கண்ணன்:** நான் இன்னும் ஒரு மணிநேரம் கூடத் தூங்கியிருப்பேன். அப்பா தான் எழுப்பிவிட்டார்.

**தாத்தா:** நீ சின்னப்பிள்ளை ஓடியாடிவிளையாடுவாய். அப்பா வேலைக்குப் போவார். வீட்டிலும் ஏதாவது வேலையிருக்கும், அதனால் நீங்கள் ஓய்வு நாள்களில் அதிக நேரம் தூங்குவதிலே தவறில்லை. வயதானவர்களுக்கு அதிக தூக்கம் தேவையில்லை. முடிந்தளவு நல்ல புத்தகங்களை வாசிப்பது தேவார திருவாசகங்களைப் படிப்பதுதான் நல்லது.

**கண்ணன்:** இப்போது என்ன புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறீர்கள் தாத்தா?

**தாத்தா :** இந்து சமயம் என்றொரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

**கண்ணன்:** அது யார் எழுதிய புத்தகம் தாத்தா? அதில் என்னவெல்லாம் சொல்லப்பட்டிருக்கு?

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 41



**தாத்தா :** இது சுவாமி மதுராந்தகர் எழுதிய புத்தகம். இதில் இந்து சமயத்தவர்கள் அறிய வேண்டிய முக்கியமான விஷயங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றது.

**கண்ணன்:** அப்படியா? நீங்கள் படித்தவற்றில் எனக்கும் கொஞ்சம் சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா :** சரி கண்ணா! கோயில் என்ற சொல்லின் கருத்து என்ன வென்று சொல்கின்றேன். கேள். கோ+இல் என்று பிரித்துப் பார்த்தால் கோ என்றால் கடவுள், அல்லது தலைவன் என்பது அர்த்தமாகும். இல் என்பது தங்குகின்ற இடம் என்று பொருளாகும். எனவே,

**கண்ணன்:** நான் சொல்லட்டுமா தாத்தா!

**தாத்தா :** சரி சொல் பார்ப்போம்.

**கண்ணன்:** கோயில் என்றார் கடவுள் இருக்கும் இடம் என்பது பொருளாகும். சரிதானே தாத்தா!

**தாத்தா :** கெட்டிக்காரன். கடவுளர்களின் வடிவங்களும் அதற்கான விளக்கங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. கோயிலின் அமைப்பைப் பற்றிய விளக்கம் கூடச் சொல்லப்பட்டிருக்கிறது.

**கண்ணன்:** பிள்ளையாரைப் பற்றிச் சொல்லுங்கோ தாத்தா! பிள்ளையாருக்கு ஏன் யானைத் தலை, ஐந்து கரங்கள் இருக்கின்றன?

**தாத்தா :** யானைத்தலை ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை உணர்த்துகிறது. ஐந்துகரங்கள் உடையவராக இருப்பது அவர் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கிறார் என்பதைக் காட்டுகிறது.

**கண்ணன்:** நான் கோயிலுக்குப் போகும் போதெல்லாம் பிள்ளையாருக்கு மட்டும் ஏன் யானைத்தலை இருக்கு என்று யோசிப்பேன். இன்று தான் எனக்கு விளங்கியிருக்கு. பிள்ளையாருக்கு ஏன் பெரிய வயிறு இருக்கு? அதையும் தெரிந்தால் சொல்லுங்கோ தாத்தா?

**தாத்தா :** உலகம் எல்லாம் (அண்ட சராசரம்) அவரின் வயிற்றிலேயே அடங்கியிருப்பதாக அர்த்தம் என்று இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் சிலர் விநாயகர் மக்கள் செய்யும் பாவங்களை போக்கி அருள்புரிவதால் அந்தப் பாவங்கள் யாவற்றையும் தனது வயிற்றில் ஏற்று வைத்துள்ளார் என்று சொல்வார்கள்.

**கண்ணன்:** பிள்ளையாரைக் கும்பிடும்போது எல்லோரும் தலையில் குட்டிப் பின்பு தோப்புக்கரணம் போடுகிறார்களே தாத்தா. தாங்கள் செய்த பாவங்களைத் தீர்த்துவிடு என்று கேட்பதற்கோ?

**தாத்தா :** ஆமாம் அப்படியும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் இந்தப் புத்தகத்தில் விஞ்ஞான விளக்கம் ஒன்று தந்திருக்கிறார்.

**கண்ணன்:** அப்படியா? இது விஞ்ஞான யுகம் தானே? எதையும் விஞ்ஞான ரீதியாக நிரூபித்து விடுகிறார். அது என்னவென்று சொல்லுங்கோ தாத்தா!

**தாத்தா :** தோப்புக்கரணம் நல்ல உடற்பயிற்சியாகும். குட்டும்போது மூளையுடன் தொடர்புடைய நரம்புகள் விறுவிறுப்பாகச் செயற்படத் தொடங்கும். இதனால் புத்திக் கூர்மையும் ஞாபக சக்தியும் அதிகரிக்கும்.

**கண்ணன்:** அப்படியா தாத்தா! என்னைப் போன்ற படிக்கிற சிறுவர்கள் எல்லாம் காலையிலும் மாலையிலும் கடவுளைக் கும்பிடும் போது குட்டிக் கும்பிட்டுத் தோப்புக்கரணம் போட்டால் மூளை நன்றாக வேலை செய்யும். நாங்களும் நல்ல கெட்டிக்காரர்களாக வரலாம் இல்லையா தாத்தா?

**தாத்தா :** நிச்சயமாகக் கண்ணா! பிள்ளையாரின் அருளும் கிடைக்கும். சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்குமே இது நன்மையைத்தரும். மூளை சுறுசுறுப்பாக வேலைசெய்தால் மக்கள் ஆரோக்கியமாக நீண்டகாலம் உயிர்வாழ்வர் என்றும் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

**கண்ணன்:** எனது நண்பர்கள் தாங்கள் குளப்படி செய்தால் தோப்புக்கரணம் போடுவது தான் தங்கள் பெற்றோர் தரும் தண்டனையாம் என்று சொல்வார்கள்.

**தாத்தா :** ஆமாம் கண்ணா! இது எல்லா வீடுகளிலும் நடக்கும் விஷயம் தான். நீ நல்ல பிள்ளையானதால் தப்பிவிட்டாய்.

**கண்ணா:** நீங்கள் நல்லவற்றைச் சொல்லி நல்ல பிள்ளையாக வளர்த்திருக்கிறீர்கள் தாத்தா. இப்போ ஏன் எல்லாக் கடவுளுக்கும் ஒரு வாகனம் இருக்கிறது? பிள்ளையாருக்கு எலி, முருகனுக்கு மயில், சிவனுக்குக் காளை, பத்திர காளிக்குச் சிங்கம், விஷ்னுவுக்குக் கருடன்.

**தாத்தா :** எங்கும் நிறைந்த இறைவன் எல்லா உயிரினங்களிலும் இருக்கிறான் என்பதைக் காட்டுவதற்காகத் தான் அப்படி ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு வாகனம் உள்ளது. இந்து சமயத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு காரணம் உண்டு கண்ணா! நீ இப்படிக் கேட்டறிந்து கொள்ள ஆசைப்படுவது எனக்குச் சந்தோஷமாக இருக்கு.

**கண்ணன்:** இப்படிச் சொல்லித்தர ஒரு தாத்தா இருப்பது எனக்குச் சந்தோஷமாக இருக்கு. இன்று பிள்ளையாரைப் பற்றி ஒரு பாடல் சொல்லித்தாருங்கோ தாத்தா.

**தாத்தா :** சரி கண்ணா! ஔவையார் பிள்ளையாரில் மிகுந்த பக்தி உடையவர். அவர் பாடிய பாடல் ஒன்றைச் சொல்கிறேன் கேள்.

**கண்ணன்:** சரி தாத்தா சொல்லித் தாருங்கோ. நான் மனப்பாடம் செய்கிறேன்.

**தாத்தா :** வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது- பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்

தப்பாமல் சார்வார் தமக்கு.
(தாத்தா சொல்லச் சொல்ல கண்ணன் பாடுகிறான்)

**கண்ணன்:** நான் இரண்டு நாளில் பாடமாக்கி விடுவேன் தாத்தா. இப்போ இதன் கருத்தைச் சொல்லித் தாருங்கோ.

**தாத்தா :** சரி கண்ணா! பூக்களை, சிவந்த மேனியும் தும்பிக்கையையும் உடையவரான பிள்ளையாரின் பாதங்களில் வைத்துத் தினந்தோறும் வணங்குபவர்களுக்கு நல்ல பேச்சுத்திறமை வரும், மனத்தில் நல்ல சிந்தனை தோன்றும், தாமரை மலரில் அமர்ந்துள்ள திருமகளின் அருட்பார்வை கிட்டும், நோய் நொடி ஒன்றும் உடம்புக்கு வரமாட்டாது என்பது இப்பாடலின் கருத்து. ஔவையார், பிள்ளையாரைத் தவறாது வணங்கினார். எங்களுக்கு ஒரு குறையுமே வரமாட்டாது என்று சொல்கிறார்.

**கண்ணன்:** இவ்வளவு பலன் கிடைக்குமா தாத்தா! நான் இனிமேல் தவறாது பிள்ளையாரை கும்பிடப்போகின்றேன். திருமகளின் அருட்பார்வை கிட்டும் என்றால் என்ன தாத்தா.

**தாத்தா :** திருமகள் என்றால் மகாலட்சுமி. செல்வத்தைத் தருபவள் திருமகளின் அருட்பார்வை கிட்டும் என்றால் நிறையச் செல்வம் கிடைக்கும் என்பதுதான் அர்த்தம்.

**கண்ணன்:** குளிர்காலத்தில் இந்த ஊரில் ஒவ்வொருநாளும் பூக்கிடைப்பது கஷ்டமே தாத்தா.

**தாத்தா :** தேவாரம் பாடிப் பக்தியுடன் கும்பிட்டால் போதும் கண்ணா! பூமாலை இல்லாத போது பாமாலை பாடிக் கடவுளை வணங்கலாம். கண்ணா! ‘கடவுளை நம்பினோர் கை விடப்படார்’ என்பது பெரியோர் வாக்கு.

**கண்ணன்:** கடவுள் காப்பாற்றுவார் என்று நம்பி எதைச் செய்தாலும் அது சரியாகவே நடக்கும் என்பது தான் இதன் அர்த்தமோ?

**தாத்தா :** ஆமாம் கண்ணா! அதனாலேதான் இந்துக்கள் அரங்கேற்றமோ, திருமணமோ, சிறு நிகழ்ச்சியோ, பெரிய நிகழ்ச்சியோ கடவுளுக்குப் பூசை செய்தே ஆரம்பிப்பார்கள்.

**கண்ணன்:** இன்று வெள்ளிக்கிழமை அல்லவா? நீங்கள் கோயிலுக்குப் போகவில்லையா?

**தாத்தா :** இன்று விடுமுறைதானே எல்லோரும் போகலாமல்லவா? அப்பாவை லூயிஷம் சிவன் கோயிலுக்குப் போகலாமா என்று கேள்.

**கண்ணன்:** நீங்கள் சொன்னால் அப்பா மறுக்கவா போகிறார். அவரை வெளிக்கிடச் சொல்கிறேன். நீங்ள் வெளிக்கிடுங்கோ தாத்தா.

**தாத்தா :** சரியடா கண்ணா! நீ எல்லோரையும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாய். நான் கொஞ்ச நேரத்தில் ஆயத்தமாகி விடுவேன்.

# Hinduism in search of answers…

**HINDU SCRIPTURES – ITHIHAASAS (contd)**
**The Mahabharata**

Written by the poet Vyasa, The Mahabharata is a book of legends. It is the epic tale of a quarrel between the Pandavas and the Kauravas that culminated in a terrible fratricidal war. While primarily a book concerned with the acts of mankind, it had a major impact on Hindu belief because of the role that Krishna plays during the climax of the epic. He acts as a counsel to the hero, Arjuna, on the way of the cosmos.



The longest poem in the world, The Mahabharata is filled with many plots and sub-plots. It becomes difficult to describe any one character as hero or villain, because the boundaries between right and wrong become blurred. It seems to raise more questions about righteousness than it answers.

In the Mahabharata, Pandu, father of the Pandavas, was crowned king of Hastinapur because his elder brother, Dhritrashtra was born blind and therefore unfit to rule. Pandu however was forced into exile after accidentally killing a sage while out on a hunt. In his absence, Dhritarashtra was appointed regent.






When Pandu died, his sons were brought to Hastinapur to be raised along with the sons of Dhritarashtra, the Kauravas. On coming of age, the Pandavas asked that the city of their father be restored to them.

Dhritarashtra, unwilling to give away what the Kauravas had come to believe was their birthright, decided instead to divide

the kingdom. The Pandavas were given the wilderness of Khandavaprastha, on which they established the rich and prosperous city of Indraprastha.

The Kauravas, envious of the Pandava fortune, invited them to a game of dice, where the Pandavas foolishly gambled away the rights to their city for a period of thirteen years.

A pivotal point in the Mahabharata. In this painting Krishna protects Draupadi, as one of the Kurus tried to disrobe her. According to Hindu theology, the abuse of a woman incurs heavy "bad karma." None of the nobles intervened and in this way they precipitated their destruction on the field of Kurukshetra.



After thirteen years, however, the Kauravas refused to part with the land. And so a battle was fought on the fields of Kurukshetra, raging for eighteen days, until the earth was soaked with the blood of a hundred thousand warriors.

At the crucial moment when the battle was about to start, the Pandava Arjuna loses his will to fight, realising that he would be forced to kill his half-brothers. Krishna, serving as his charioteer, restores his confidence, not by justifying the war, but by explaining to him the significance of action and duty in the cosmic plan.

## Bhagavat Gita

Krishna's counsel to Arjuna is revered as, 'Bhagavad Gita,' the song of the lord. Krishna states that there is more to life than empirical reality. He says that the aging body and the wavering mind ensheath a divine essence - the serene soul. He explains how the immortal soul can be liberated from its mortal confines by realizing that all turmoil experienced by the body and the mind is a product of ignorance and attachment.

To facilitate this realization, Krishna offers the technique known as yoga, explaining its three different forms.



1) Jnana Yoga, logically becoming aware of the reality beyond perception

2) Bhakti Yoga, humbly accepting every situation as the will of the divine

3) Karma Yoga, fulfilling one's commitments without an eye on the results

Krishna explains that karma yoga is the best way to attain oneness with god, because it helps society function and it maintains worldly order, while also ensuring individual salvation.

While the Vedas may be the ultimate authority in Hinduism, epics such as the Mahabharata and the Ramayana have had a more significant impact on the culture and behavior of Hindus.

The popularity of the Gita is, to some extent due to the fact that it managed to show that different pathways to God are all equally valid. God can be reached through paths of Knowledge, Action, Devotion and Meditation. One can choose the pathway or any combination of pathways to suit one's own abilities. Pluralistic methods to reach God have been advocated by Hinduism and the Gita is

a good example of this. We all have different starting points in spiritual progress. Hence the method we each adopt to reach the same destination will necessarily be different. This essential freedom does not have to be sacrificed, says the Gita.

**PATH OF ACTION ACCORDING TO GITA:**



Without action no one can survive.

The path of action requires, that one fulfils one's duties, but do so without attachment to the results of one's actions.

Actions should be carried out without fear of punishments or the desire for their fruits.

Work away. In order not to be bound by the actions, offer the fruits of the actions to God.

Do not run after the objects of the senses. Lead a detached life. The easiest way to achieve this detachment is to offer all actions to God (KRISHNARPANAM).

Then one may become a perfect person who does work in the interest of good of the world (LOKASANGHARA)



One does not need to perform sacrificial rituals. Instead by offering one's actions to god, ordinary work becomes sacrificial ritual.

Act in such a way that it does not bind but frees one from ignorance. Do all work as worship to God.

Do everything to the best of your ability; suited to your circumstances.

We have to bear in mind that we are not the real doers - the real ' I ' is just the witness to all these activities.

The central theme of the Gita is renunciation in action – not renunciation of action. Renunciation does not mean running away from one's duties.



As long as we feel we are bound we have to make an effort to be free. The way to achieve this is by righteous living.

Shrugging off our duties towards society is not the way forward, teaches the Gita.

"Live in the world in a detached way", is the central message of Gita.
"Renounce the trivial (worldly things) in order to gain the majestic (spirituality)."

***(To be continued)***

# திருக்குறள் கற்போம்

## அருளுடைமை 25
## Mercy

**அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.**

செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வம் உயர்ந்தோரிடம் விளங்கும் அருட்செல்வமே. பொருட்செல்வம் இழிந்தோரிடத்தும் காணப்பெறும்.
The wealth of kindness possessed only by the good is wealth of wealth; the wealth of property is possessed even by the basest of men.

**நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அ∴தே துணை**

நல்ல வழியாலே ஆராய்ந்து அருளுடையர் ஆகுக. பல வழிகளால் ஆராய்ந்து தெளிந்தாலும் அவ்வருளே துணையாம்.
Stand in the good path, consider and be kind; although you may perfectly study the rules of many different (sects), that (kindness) will be your best aid (in the acqusition of heavenly bliss)

**அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்**

அருள் பொருந்திய மனமுடையார்க்கு அறியாமையுடைய துன்ப உலகிற் சேர்தல் இல்லை.
They will never enter the world of darkness and wretchedness whose minds are the abode of kindness

**மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை**

நிலைபேறுடைய உயிர்களைக் காத்து அருள் செய்வானுக்குத் தன்னுயிரை ஒரு பொருட்டாக மதித்து அஞ்சும் செயல்கள் இல்லை..
(The wise) say that the evils, which his soul would dread, will never come upon the man who excercise kindness and protects the life (of other creatures)

**அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி**

அருளுடையார்க்கு எப்பொழுதும் துன்பமில்லை. அதற்குக் காற்று வீசும் செழிப்பான பெரிய உலகமே சான்று.
This great rich earth over which the wind blows, is a witness that sorrow never comes upon the kind - hearted.

**பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி**
**அல்லவை செய்தொழுகு வார்**

உயிர்களிடத்து அருளின்றிக் கொடுமை செய்தொழுகுவாரை அறம் செய்தலைத் தவிர்த்து கடமையை மறந்தாரென்று சொல்லுவர் நல்லோர்.
(The wise) say that those, who neglect kindness and practice cruelties, neglected virtue (in their former birth) and forgot (the sorrow they must suffer)

**அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லையாயினாற்போல, உயிர்கள் மேல் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலக இன்பம் இல்லை.
As this world is not for those who are without wealth, so, that world is not for those who are without kindness

**பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்**
**அற்றார்மற் றாதல் அரிது**

பொருட் செல்வமற்ற வறியவர் பின் ஒருகாலத்துச் செல்வத்தால் செழிப்பர். ஆனால் அருட்செல்வமற்ற கொடியவர் அழிந்தவரே, பின் ஒருகாலத்தும் ஆக்கம் பெறுதல் இல்லை.
Those who are without wealth may, at some future time, become prosperous; those who are destitute of kindness are utterly destitute; for them there is no change (prosperity)

**தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.**

அருளில்லாதவன் செய்யும் அறச் செயல்களை ஆராயின் அ்.து அறிவுத் தெளிவு இல்லாதவன் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும். (உணரமுடியாது என்பது கருத்து)
If you consider the virtue of him who is without kindness it is like the perception of the True Being by him who is without wisdom

**வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து**

தன்னைவிட மெலியவரிடத்து தான் துன்புறுத்தச் செல்லும்போது வலிமை மிக்கவர் தன்னைத் துன்புறுத்த வரும்போது, அவர் எதிரே தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணுக.
When a man is about to rush upon those who are weaker than himself,let him remember how he has stood (trembling) before those who are stronger than himslef.

**தமிழ்: முனைவர் இரா சாரங்கபாணி** ***English: Rev Drew & John Lazarus***

ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 51





ekalasam-70:Layout 1 20/10/11 17:48 Page 52




# WESTERN
## JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
**PHONE : 020 8767 3445**

# SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
**PHONE : 020 8672 1900**

# WESTERN
## JEWELLERS & TEXTILES

5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
**PHONE : 020 8903 0909**

**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**




இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8685 9203) வடிவமைத்து, அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 07-10-2011 அன்று வெளியிடப்படுகிறது.